பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 14 திங்கட்கிழமை (30-10-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:270

## நேற்றைய ஹர்த்தாலை அடுத்து

# தலவாக்கொல்லையில் பெரும் கலவரம் மூண்டது!

## கடைகள் எரிப்பு! ரயிலுக்குத் தீவைப்பு!! பொலீஸாரின் சூட்டுக்கு நால்வர் பலி!!!

தலவாக்கொல்லை,ஒக்ரோபர்30

**தமிழ் மற்றும் சிங்கள மக்கள் நிறைந்து வாழும் தலவாக்கொல்லைப் பகுதியில் பெரும் கலவரங்கள் மூண்டுள்ளன.**

**பண்டாரவளையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மலையகத்தில் நேற்று நடைபெற்ற ஹர்த்தால் மற்றும் ஆட்சேபப் போராட்டங்களை அடுத்தே அங்கு இரு இனத்தவருக்கும் இடையே கலவரங்கள் வெடித்ததாக அறிவிக்கப்படுகிறது.**

**இரு தரப்புக்களைச் சேர்ந்த வன்முறையாளர்களும் மாறிமாறி கடைகளுக்குத் தீ வைத்தனர். ரயில் நிலையம் ஒன்றும், ரயில் பெட்டிகள் சிலவும் எரிக்கப்பட்டன. பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு தமிழர்கள் உயிரிழந்தனர்; பத்துப்பேர் காயமடைந்தனர்.**

மலையக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் தலவாக்கொல்லையில் நடந்த மறியல் போராட்டத்தின் இறுதியில் நேற்றுப் பிற்பகல் அங்கு கட்டப்பட்டிருந்த பதாகைகள், கொடிகளை சிலர் அறுக்க முற்பட்டதைத் தொடர்ந்தே கலவரம் மூண்டதாகத் தெரியவருகிறது. அச்சமயம் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் அங்கு கூட்டம் ஒன்றில் உரையாற்றிக்கொண்டிருந்தார்.

தலவாக்கொல்லை பொலீஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான 25க்கும் மேற்பட்ட கடைகள் சூறையாடப்பட்டு தீவைத்துக் கொளுத்தப்பட்டன. சிங்களவருக்குச் சொந்தமான சில கடைகளும் தாக்கப்பட்டன.

இதனையடுத்து தலவாக்கொல்லை, வட்டவளை, கொட்டகொல்லை ஆகிய பகுதிகளில் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கைப் பொலீஸார் நண்பகலில் அமுல்செய்தனர். அச்சமயம் தலவாக்கொல்லையில் ஆர்ப்பாட்டம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றிரவு ஊரடங்கு அமுல்

கொழும்பு,ஒக்.30

நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் நேற்றிரவு 8மணிக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச்சட்டம் இன்று அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படும் என்று தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரியரூபசிங்க அறிவித்துள்ளார். (ஐ-3-8)

## அரசாங்கம் அறிக்கை

கொழும்பு,ஒக்.30

தலவாக்கொல்லையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக அரசாங்கம் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக நேற்று மாலை அரசாங்கம் வெளியிட்ட விசேட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கும் அவர்களது உடைமைகளுக்கும் பூரண பாதுகாப்பு வழங்

(10ஆம் பக்கம் பார்க்க)

## எல்லைக் கிராமங்களுக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஒக்.30

பண்டாரவளைப் படுகொலைச் சம்பவத்தின் எதிரொலியாக சிங்களக் கிராமவாசிகள் தாக்கப்படலாம் என எதிர்பார்த்து எல்லைக் கிராமங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரம், பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.பழிவாங்கும் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தக்கூடும் எனப் பாதுகாப்பு அதிகாரிகள் அஞ்சுவதையே இது காட்டுவதாக பி.பி.ஸி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார். (ஜ-5)

## பாதுகாப்புச் சபை அவசரமாகக் கூடியது

# கலகம் அடக்கும் படையினர் கொழும்பில் இருந்து விரைவு!

கொழும்பு,ஒக்.30

தலவாக்கொல்லையில் மூண்டுள்ள கலவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக, இராணுவத்தினரும், கலகம் அடக்கும் பொலீஸாரும் நேற்றிரவு கொழும்பில் இருந்து அங்கு அனுப்பப்பட்டுள்ளதாகப் பிந்திய செய்திகள் தெரிவித்தன.

மலையகத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்து ஆராய்வதற்காக பிரதமர் ரத்னசிறிவிக்கிரமநாயக்க தலை

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிலைகள் மீது

# மட்டுவில் வடக்கில் படை நடவடிக்கை!

கொழும்பு, ஒக்.30

மட்டுவில் வடக்கில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் பலமான நிலைகளையும் முன்னரங்கப் பதுங்குகுழிகளையும் கைப்பற்றுவதற்காகப் படையினர் நேற்றுக்காலை 'ஹினிகிர-3' இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்றுப் பிற்பகல் அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் போது ஓர் அதிகாரியும், பத்துப் படையினரும் காயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்பாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நேற்றுப் படையினர் மேற்கொண்ட

(10ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் அமைச்சர் அனுருத்த ரத்வத்த

கொழும்பு, ஒக்.30

நாட்டின் பாதுகாப்பு மற்றும் போர் நிலைமைகளை ஆராய்வதற்காக தேசிய பாதுகாப்புச்சபையின் விசேட கூட்டம் கடந்த வியாழக்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் மதியபோசனமும் இல்லாது தொடர்ச்சியாக ஏழு மணி நேரம் நடைபெற்ற இந்த முக்கிய கூட்டத்தில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும் கலந்துகொண்டார்.

பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா, இரா

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜனுக்கு அஞ்சலி செலுத்த

# யாழ்.நகரில் புதனன்று அமைதிப் போராட்டம்

### எழுதுவதை 2 நிமிடங்கள் நிறுத்தி அஞ்சலி செய்யவும் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.30

படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10.30மணிக்கு யாழ்பஸ் நிலையம் முன்பாக அமைதிப் போராட்டம் நடைபெறும்.

வட.இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த அமைதிப் போராட்டம் இடம்பெறும.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டம் தொடர்பாக வட.இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் -

நிமலராஜனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குடாநாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகள், உயர் கல்விப் பீடங்கள், அரச, வர்த்தக, தனியார், கூட்டுறவு, ஊடகவியல் மற்றும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# களுத்துறை, வெலிக்கடை சிறைச்சாலைகளில் பதற்றம்

## கைதிகள் பாதுகாப்புக் கோருகின்றனர்

கொழும்பு,ஒக்.30

பண்டாரவளை விந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தை அடுத்து களுத்துறை, வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க்கைதிகளிடையே அச்சம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளிடம் அவர்கள் தமது நிலை தொடர்பாக கவலை தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்தச் சிறைச்சாலைகளுக்கு விஜயம செய்த சிறைச்சாலைத் திணைக்களத்தைச் சேர்ந்த தமிழ் அதிகாரி ஒருவர் மூலமாக சிறைக்கைதிகள் தமது நிலையைத் தெரியப்படுத்தி உள்ளனர்.

தமது பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறைச்சாலைகளில் பதற்றம் நிலவுவதாகவும் அங்கு சென்ற அதிகாரி கொழும்பில் உள்ள தமிழ் அரசியல் வாதிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனுக்கும் இத்தகவல

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

(9ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கொழும்பில் தேடுதல்கள் மும்முரம்

# கடந்த சில தினங்களில் 200 பேர் கைதாகினர்!

கொழும்பு,ஒக்.30

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடந்த சில தினங்களாக பொலீஸாரும், இராணுவத்தினரும் இணைந்து கூட்டாக மேற்கொண்ட தேடுதல்களின் போது பெண்கள் உட்பட இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு நகரினுள் ஊடுருவியுள்ள விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாரிகளைக் கைது செய்யும் நோக்கில் இந்தத் தேடுதல்கள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இரவு நேரங்களிலும், அதிகாலை வேளையிலும் இந்தத் தேடுதல்கள் இடம்பெறுகின்றன என்றும் -

தெமட்டகொடை, பொரளை, கொழும்புக் கோட்டை, நகரஹேறன் பிட்டி, வெள்ளவத்தை, நுகேகொட ஆகிய பகுதிகளில் இதுவரை தேடுதல்கள் இடம் பெற்றுள்ளன என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - சிவில் உடையில் பொலீஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின. (ஐ-3-4)


### விசேட அறிவித்தல்

யாழ்.நகர்மைய றோட்டரக்ட் கழகம் நடத்தும் க.பொ.த. (சா/த) முன்னோடிப் பரீட்சையில் இன்று (30.10.2000) 2.30 மணிக்கு கணித பாடம் இடம்பெறும்.

யாழ்.நகர்மைய றோட்டரக்ட் கழகம்.

(C/13626)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாகிய**

| | |
|---|---|
| செல்வன் கோகுல் சண்முகரத்தினம் | 157 |
| செல்வன் மயூரன் பத்மநாதன் | 152 |
| செல்வி யசோ ஸ்ரீஸ்கந்தராசா | 143 |
| செல்வன் கௌசிக் தர்மகுலசிங்கம் | 134 |

ஆகிய மாணவர்களையும் கல்விக்கு வித்திட்ட அதிபர், ஆசிரியர்களையும், ஏனைய கல்விமான்களையும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

-பெற்றோர்
புலோலியூர்

(C/13625)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2000.**

| | |
|---|---|
| 1. செல்வன் தி.தர்ஷன் | 163 புள்ளி |
| 2. செல்வி ச.ஜனனி | 156 புள்ளி |
| 3. செல்வன் இ.கோகுலவாசன் | 151 புள்ளி |
| 4. செல்வி தி.சிந்துஜா | 148 புள்ளி |
| 5. செல்வி த.ஜனார்த்தனி | 140 புள்ளி |

சித்தியடைந்த மேற்படி மாணவர்களையும், வெட்டுப்புப் புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும், இவர்கள் அனைவரையும் ஊக்கமளித்துக் கற்பித்து வழிகாட்டி நின்ற அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் உளமார வாழ்த்துகின்றோம்.

- பெற்றோர்.

(C/13623)



**லக்ஷ்மி சினிமா**
இணுவில்
**விஜய், ரம்பா**
நடிப்பில்
**மின்சாரகண்ணா**
(ரீல்ஸ்) காட்சிகள்:
10.30, 2.30 (புதிய நேரம்)

**நாகம்ஸ்** சுன்னாகம்
கார்த்திக், கௌசல்யா, ஹீரா, அப்பாஸ் நடித்த
**பூவேலி**
(ரீல்ஸ்)
காட்சிகள்- 11.00, 2.30 (பு.நே).

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
**விஜய், ஜோதிகா, விஜயகுமார்** மற்றும் பலரின் நடிப்பில்
**குஷி**
காட்சிகள்:
10.30, 2.00 (பு.நே.)


# பாபாவின் ஆசி பெறுவதற்காக அநுரா புட்டபர்த்தி சென்றார்

கொழும்பு,ஒக்.30

சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்க சாயிபாபாவின் ஆசிகளைப் பெறுவதற்காக புட்டபர்த்திக்குச் சென்றுள்ளார்.

சபாநாயகராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அநுரா மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளையும், கொழும்பு மேற்றிராணியாரையும் சந்தித்து அவர்களது ஆசியைப் பெற்றுக் கொண்டார். அதன் பின் சாயிபாபாவின் ஆசியைப் பெறுவதற்காக அவர் இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

இதேவேளை- சபாநாயகரின் தனிப்பட்ட செயலாளராக லாஜுட் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-3)

## தமிழ்க் கைதிகளைக் கொன்றோர் மீது

# கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் டக்ளஸ் வற்புறுத்து

பண்டாரவளை விந்துனுவெவ தடுப்பு முகாமில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் நேரடியாகக் கோரியுள்ளார்.

அந்த முகாமுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் ஜனாதிபதியைச் சந்தித்த சமயமே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அவரிடம் உறுதி அளித்ததாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

# பலியான தமிழ்க் கைதிகளின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடாக தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்த நஷ்டஈட்டினை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் கலாநிதி சுனில் ஜெயசிங்க நவரட்ண தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகள் அரசாங்கத்தின் செலவிலே நடத்தப்பட்டதாகும் அவர் மேலும் கூறினார். (ஐ-5-8-ரீ)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் பாஸ்கரன் கிருஷாந்



அல்வாய் வடக்கு மகாத்மா வீதியைச் சேர்ந்தவரும், நோர்வேயில் வசிப்பவருமாகிய பாஸ்கரன் - கிருஷ்ணவேணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் 'கிருஷாந்' தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (30.10.2000) திங்கட்கிழமை நோர்வேயில் கொண்டாடுகின்றார்.

இவர், அல்வை வேவிலந்தை முத்துமாரி அம்மன் அருளால் நீடூழி வாழ, அம்மம்மா, அம்மப்பா, அப்பம்மா விசிமாமா, சசிமாமா மற்றும் மாமா, மாமிமார், சுவிஸ் பெரியப்பா குடும்பம், அல்வாயில் உள்ள பெரியப்பாமார்களான சிவஞானசுந்தரம், வெற்றிவேல் குடும்பம், கனடாவிலுள்ள மச்சாள் குடும்பம், பிரான்ஸிலுள்ள அத்தான்மார் ஆகியோர் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
நாகமுத்து சின்னத்தம்பி (பேரன்)

(C/13624)



## சந்தியாவின் வாடிக்கையாளர்களே!

இதுவரை பிரதான வீதி, சங்கானையில் இயங்கிவந்த எமது நிறுவனத்தை **இன்றுமுதல்** அதே பிரதான வீதி, சங்கானையில் வேறு ஒரு கட்டடத் தொகுதிக்கு இடம் மாற்றுகின்றோம்.

**சங்கானையில் புதியஇடம் :**
**இல.5, பிரதான வீதி, சங்கானை.**
**(பாக்கியரத்தினம் கட்டடப் பொருள் விற்பனை நிலையம் எதிரில்.)**

*நிர்வாகம்*
*சந்தியா மல்ரி கோட்யாட்*

'சந்தியா உங்கள் அன்பிற்குரியவர்க்கெல்லாம் அன்பிற்குரியவர்'

* அன்பளிப்புப் பொருள்கள்
* அழகுசாதனப் பொருள்கள்
* பாதணி வகைகள்
* பாடசாலைப் பொருள்கள்
* கை, மேசை, சுவர் மணிக்கூடுகள்
* தையல் பொருள்கள்
* எவர்சில்வர் பொருள்கள்
* பிளாஸ்ரிக் பொருள்கள்
* அழகிய வர்ணப் படங்கள்
* வாழ்த்து மடல்கள்
* சென்ற் வகைகள்
* Bayrom & After Shave
* Fevicryl Cloth Paint & Acron Paint Items

பட்டின் பக்கிள் கவரில் செய்து பெற்றுக்கொள்ளவும்

# சந்தியா

**மல்ரி கோட்யாட்**

இல.5, பிரதான வீதி, சங்கானை.

பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

(80011)



## நாளை (31.10.2000) ஈசுர விநாயகர் தேவஸ்தானத்தில்

# ஆன்மீகப் போராட்ட 9ஆம் ஆண்டுப் பூர்த்தி வழிபாடு

**(இறை விண்ணப்பம்)**

பிற்பகல் 3 மணியளவில் : விசேஷ அபிஷேகம், பூசை வழிபாடு, சுவாமி வீதி உலா.

இரவு 7.00 மணியளவில்: அல்லலுறும் தமிழ் மக்களின் துயர் நீங்கிட இறையருள் வேண்டி **108 விடி விளக்குகள்** ஏற்றிவைக்கப்படும்.

*சோழியூரான் – பிறைசூடிக்குரு*

(80018)

# பல்கலைக்கழகங்களில் கல்வியை தொடரும் ஆசிரியர்கள் விவரம்

## கல்விப் பணிப்பாளர் திரட்டுகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.30

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் பணியாற்றும் ஒரு சில ஆசிரியர்களும், எழுதுவினைஞர்களும் பாடசாலைகளில் சம்பளங்களைப் பெற்றுக் கொண்டு பல்கலைக்கழகத்தில் முழுநேரக் கல்வியைத் தொடர்வதால் அவர்களது சம்பளங்களை இடைநிறுத்தி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளரினால் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் ஒன்றில் மேற்படி விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாடசாலைகளில் சம்பளம் பெற்றுக் கொண்டு பல்கலைக்கழகங்களில் கற்பவர்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அவர்களின் பெயர் விவரங்களை தெரியப்படுத்துவதுடன் சம்பளத்தையும் இடைநிறுத்தி வைக்கவும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்கள் வைத்திய பரிசோதனையை 6 மாதத்துக்குள் முடித்திருக்காவிட்டால் அவர்களது சம்பளத்தையும் இடைநிறுத்தி வைக்குமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

சேவை மூப்பு அடிப்படையில் 2000 ஆம் ஆண்டில் உள்ளீர்ப்புச் செய்த ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலை தமக்கு சமர்ப்பிக்குமாறும் இதுவரை ஜீ.சி.ஈ உயர்தரம் மற்றும் சாதாரணதர சான்றிதழ்கள் தேர்வு ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்படாமல் இருந்தால் அலுவலக ஊழியர் ஒருவரை கடமை விடுமுறையில் கொழும்புக்கு அனுப்பி அவற்றை விரைவாக உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரி-10)

# 45 அமைச்சுக்களினதும் செயலாளர்களின் விவரம்

கொழும்பு,ஒக்.30

அமைச்சுக்களின் செயலாளர்களாக 45 பேர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் வருமாறு:-

- ★ கிழக்கு மாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு - திருமதி ராஜபக்ஷ
- ★ புத்த சாசன சமய விவகாரம் - எஸ்.சுகுணதாச
- ★ பெருந்தோட்டத்துறை - கே.பி.சிறிசேன
- ★ இலாகா அற்ற அமைச்சு - ஆர்.எஸ்.அத்துகொறள
- ★ துறைமுக அபிவிருத்தி தென் மாகாண அபிவிருத்தி - பி.எம்.பி.பீ.தசநாயக்க
- ★ விவசாய அமைச்சு - எம்.எஸ்.விக்கிரமயராச்சி
- ★ கடற்றொழில் மீன்வள அபிவிருத்தி - எஸ்.அமரசேகர
- ★ பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் நிர்வாக சீர்திருத்தம் - எம்.எச்.ஜுனைட்
- ★ தொழில் பயிற்சி அமைச்சு - சுமனசிறி ஹலுகல்ல
- ★ தபால் தொலைத்தொடர்பு - எஸ்.எஸ்.எதிரிவீர
- ★ சமுர்த்தி கிராமிய அபிவிருத்தி நாடாளுமன்ற விவகாரம் - கலாநிதி சுனில் ஜெயந்த நவரத்ன
- ★ நகர அபிவிருத்தி நிர்மாணம் பொது வசதிகள் அமைச்சு - ஆனந்த எஸ்.குணசேகர
- ★ மின்சக்தி, எரிபொருள் - ஜாலிய மெதகம
- ★ உயர்கல்வி தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சு - பேராசிரியர் ஆர்.பி.குணவர்தன
- ★ பெருந்தெருக்கள் அமைச்சு - எஸ்.எல்.சேனவிரத்ன
- ★ வெளிவிவகார அமைச்சு - லயனல் பெர்னாண்டோ
- ★ அரசமைப்பு கைத்தொழில் அபிவிருத்தி - டபிள்யூ, டி.மீரசேகர
- ★ விமானப் போக்குவரத்து விமான நிலைய அபிவிருத்தி அமைச்சு - பீ.ஹேவாகம
- ★ மகாவலி அபிவிருத்தி அமைச்சு - எஸ்.எம்.எஸ்.பீ.நியங்கொட
- ★ தொழிலமைச்சு - மகிந்த கம்மேவல
- ★ உள்ளூராட்சி மாகாணசபை - பி.லியனராச்சி
- ★ நீதி அமைச்சு - கே.ஏ.எஸ்.குணசேகர.
- ★ மகளிர் விவகாரம் - திருமதி எஸ்.எம்.சுமசேகரா
- ★ நீர்ப்பாசன,நீர்வள முகாமைத்துவம் - எஸ்.பி.பந்துசேன
- ★ தோட்ட உட்கட்டமைப்பு கால்நடை அபிவிருத்தி அமைச்சு - கலாநிதி பீ.ராமானுஜம்
- ★ உணவு சந்தைப்படுத்தல் அபிவிருத்தி - திருமதி குமுது குருகே.
- ★ கூட்டுறவு அபிவிருத்தி - எம்.எஸ்.ஜயசிங்க.
- ★ கலாசார அமைச்சு - டபிள்யூ.டி.எஸ்.ஜயவர்தன.
- ★ சமூகசேவை,மீனவ சமூக வீடமைப்பு அபிவிருத்தி - எம்.பீ.பீ.சில்வா.
- ★ திட்ட அமுலாக்கல் - சீ.மாலியத்த.
- ★ சுற்றுலா,விளையாட்டு - ஏ.ஏ.சில்வா.
- ★ இனவிவகார தேசிய நல்லிணக்கம் - பேராசிரியர் பீ.பீ.கிரிவெல்ல
- ★ காணி அபிவிருத்தி சிறு பயிர்ச்செய்கை ஏற்றுமதி - கலாநிதி ஆர்.எம்.கே.ரத்னாயக்க.
- ★ தகவல் ஊடகத்துறை - ஜனதாச பீரிஸ்
- ★ சுதேச மருத்துவம் - ஆர்.ஏ.ஏ.ரணவீர
- ★ கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி - டபிள்யூ.பீ.டபிள்யூ வீரவர்த்தன.
- ★ உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் வாணிபம், முஸ்லிம் மத விவகாரம் கப்பல்துறை அபிவிருத்தி அமைச்சு - எஸ்.சீ.மாணப்பெரும
- ★ கல்வி அமைச்சு - டாக்டர் தாரா டி மெல்
- ★ போக்குவரத்து அமைச்சு - எம்.சிறிவர்தன
- ★ இளைஞர் விவகாரம் - டபிள்யூ.பீ.மித்ரரத்ன
- ★ சுகாதார அமைச்சு - திலக்ரணவிராஜா
- ★ வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சு - நியமனம் செய்யப்படவில்லை.

(ஐ-ரி)

# குண்டுடன் பஸ்கள் ஊடுருவல்? குருநாகல் நகரில் பதற்றம்!

கொழும்பு,ஒக்.30

குண்டுகள் பொருத்தப்பட்ட இரண்டு பஸ்கள் குருநாகல் நகருக்குள் ஊடுருவியிருப்பதாக வெளியான தகவலை அடுத்து நேற்று முன்தினம் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

வர்த்தக நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டன. உள்ளூர், வெளியூர்ப் போக்குவரத்துச் சேவைகளும் ஸ்தம்பித்தன.

குருநாகல் பொலீஸ் நிலையத்துக்கு காலை 9.30 மணியளவில் இந்த வாகனக்குண்டு தொடர்பான தகவல் அநாமதேய தொலைபேசி அழைப்பு மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும் -

இதனை அடுத்து இராணுவத்தினரும் ,பொலீஸாரும் இணைந்து நகரப் பகுதியில் பெரும் எடுப்பிலான தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

தேடுதலின் போது குருநாகல் பஸ் நிலையத்தில் தரித்து நின்ற சகல பஸ்களும் சோதனையிடப்பட்டன. எனினும் குண்டு எதுவும் மீட்கப்படவில்லை என குருநாகல் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-7)

## 'ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை

புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடரை எதிர்வரும் 9ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆரம்பித்து வைக்கவிருக்கிறார்.

புதிய அரசின் கொள்கை விளக்கவுரையை அன்று அவர் ஆற்றுவார். (ஐ-3)

## மீனவர் விவரம் சேகரிப்பு

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி,வலிகாமம், தீவகம் ஆகிய பகுதிகளில் தற்காலிகமாக வசிக்கும் மீனவர்களின் விவரங்கள் தொழில்வருமான இழப்பு நிவாரணத்திற்காகப் பதிவு செய்யப்படவுள்ளன. இவர்களை இணுவிலில் இயங்கும் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்குஇன்று திங்கட் கிழமைகாலை 9 மணிக்கு 5 ரூபா முத்திரை, அடையாள அட்டை மற்றும் பங்கீட்டு அட்டை ஆகியவற்றுடன் சமூகமளிக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலர் கோரியுள்ளார். (இ-74)

## 8 படையினர் காயம்

கொழும்பு,ஒக்.30

எழுதுமட்டுவாழ் தெற்கு மற்றும் நாகர்கோயில் முன்னரங்க நிலைகள் மீது கடந்த வெள்ளியன்று விடுதலைப்புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் எட்டுப்படையினர் காயம் அடைந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

## மீண்டும் குடிதண்ணீர் விநியோகம்

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு மீண்டும் குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் பௌஸர் கடந்த வாரம் பழுதடைந்திருந்தமையால் தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டிருந்தது. பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.றீரங்கேஸ்வரன் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக வாகனம் திருத்தப்பட்டு மீண்டும் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-109)

## ஷெல்லினால் தாய் பலி

மட்டக்களப்பு,ஒக்.30

மட்டக்களப்பு மாவட்டம் - களுவாஞ்சிக்குடிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது ஷெல் வீழ்ந்து வெடித்ததில் குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த இளம் தாய் ஒருவர் உயிரிழந்தார். 3மாதக் குழந்தை தெய்வாதீனமாக சிறுகாயத்துடன் உயிர் தப்பியது.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.

வல்லிபுரம் வசந்தாதேவி (வயது 29) என்பவரே உயிரிழந்தவராவார். (ஐ-7-145-5)


# SWEET MEMORIES OF

LATE EDWIN A.MARIAMPILLAI

Prop: Sound Engineers, Hospital Road, Jaffna.



Born 10-01-1917

Promoted to Glory 21-07-2000

*He Was a devoted marvellous husband.*
*A thoughtful protective father.*
*A gracious loving grandpa.*
*A guide and counsellor to his friends.*
*A pillar of strength to those in trouble.*
*A sympathetic helper to those in need.*
*But above all a lover of Jesus Christ*
*Who finally called him home.*
*May God be praised*
*For a life well lived.*

***Loving Wife,***
***Dutiful Children and***
***Precious grand-children.***

*"WELL DONE THOU GOOD AND FAITHFUL SERVANT ENTER THOU INTO THE JOY OF THY LORD."*

(C/13622)

# 100 ஆவது நாள் நினைவஞ்சலி

"சவுண்ட் என்ஜினியர்ஸ்" ஸ்தாபகர்

காலஞ்சென்ற

**எட்வின் அலோசியஸ் மரியாம்பிள்ளை**

அவர்களுக்கு

**எங்கள் கண்ணீர் அஞ்சலி**

21 - 07 - 2000



30 - 10 - 2000

நாள்கள் உருண்டோடி மூன்று திங்கள் கடந்து சென்றும் சொரிந்த கண்ணீர் வற்றவில்லையே. உங்கள் நினைவை மங்காத ஒளியாய் நினைவு கூருகின்றோம். 'சவுண்ட் என்ஜினியர்ஸ்' ஸ்தாபனத்தின் சார்பாக நேரில் சமுகம் தந்து அஞ்சலி செலுத்தி மலர் வளையங்கள் ஈந்து மேலும் பல வகைகளில் உதவிகள் நல்கி - நன்றி செலுத்தும் ஆராதனையில் ஒன்று கூடி சிறப்பித்த அத்தனை அன்பு நெஞ்சங்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

தகவல்:
சவுண்ட் என்ஜினியர்ஸ்
முகாமையாளர், சக ஊழியர்கள்.

(C/13621)

# கண்ணீர் அஞ்சலி

எமது அணி மாணவனான

சுகந்தனின்

அன்புத் தந்தையார்

**S. நவநீதகிருஷ்ணன்**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

19 ஆம் அணி
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(80007)

# ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் வடக்கு அத்தியாவசிய சேவைகள்

கொழும்பு, ஒக். 30

வடக்கே உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கப்பல் மூலம் அனுப்பும் பணிகளை மேற்கொள்ளும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் ஜனாதிபதியின் பொறுப்பில் இயங்குவதாகத் தெரியவருகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் கீழ் இதுவரை காலமும் இந்தத் திணைக்களம் இயங்கி வந்தது.

அந்த அமைச்சு வடக்கு — கிழக்கு எனப் பிரிக்கப்பட்டதை அடுத்து இந்தத் திணைக்களம் ஜனாதிபதியின் பொறுப்பில் இயங்க ஆரம்பித்துள்ளது.

அத்தியாவசிய சேவைகள் நாயகமாகப் பணிபுரிந்த மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றதை அடுத்து, காலியான அந்தப் பதவிக்கு தகவல் திணைக்களத்தில் முன்பு பணிபுரிந்த ஸ்ரீபதி சூரியாராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-3)

## சிறுவனிடம் திருட்டுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஒக். 30

காரைநகரில் கடந்த சில வாரங்களாக இடம்பெற்று வந்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த பதினொரு வயதுச் சிறுவன் ஒருவன் நேற்றுப் பிடிபட்டுள்ளான்,

திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பினர் அங்கு நடத்தி வந்த விசாரணைகளை அடுத்தே லோ. மோகனதாஸ் என்ற பிரஸ்தாப சிறுவன் சிக்கியுள்ளான்.

திருட்டுப்போன சுமார் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அவனிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன என்று வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் தெரிவித்தார்.

இந்தச் சிறுவனுடன் இணைந்து வேறு சிலரும் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்தது தெரியவந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் விசாரணைகளை மேற்கொள்வதற்காக அந்தச் சிறுவன் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான். (ஐ-3)

## அஞ்சலிக் கூட்டம்

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் நினைவு அஞ்சலிக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

திருமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் கே. டி. ஜெயசேகரா தலைமையில் இந்த அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். (ஐ-5)

## 47 முதியோர் கௌரவிப்பு

நெல்லியடி, ஒக். 30

வடமராட்சி,தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சர்வதேச-சிறுவர், முதியோர் தின விழாவில் 47 முதியோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 23 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமை வகித்தார்.

உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பு. நடராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ஆ. சிவநாதன், ஓய்வுபெற்ற அதிபர் க. வேலாயுதம், சமூகசேவை அலுவலர் க. தியாகராசா. உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன், சிறுவர் நன்னடைத்தை அலுவலர் சி. புவனேந்திரன் ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய பட்டிமன்றமும் விழாவில் இடம்பெற்றது.

இறுதியில் கவிதை, கட்டுரைப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள், சீருடைகளும் 47 முதியோர்களுக்கு உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன.

கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கச் செயலாளரும், பதவி நிலை அலுவலருமான அ.மே.ஜோசெப் நன்றியுரை கூறினார். (இ-109)

## இனவெறியைத் தடுக்காதுவிட்டால்

# இனப் படுகொலைகளை இந்த நாடு மீண்டும் சந்திக்கும் நிலை ஏற்படும்

மனித நாகரிகமற்ற, காடைத்தனமான, இனவெறியைத் தூண்டுகின்ற இது போன்ற படுகொலைகளைச் சட்டம் கண்டிக்காவிட்டால் கடந்த காலங்களிலே நடைபெற்ற இனப்படுகொலைகள் போன்ற வேதனைக்குரிய நிகழ்வுகளை மீண்டும் இந்த நாடு சந்திக்க நேரிடும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரதர் அணியைச் சேர்ந்த வவுனியா மாவட்ட செயலாளர் க. ஞானதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை விந்துனுவெவ முகாமில் தமிழ் இளைஞர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்—

இந்தப் படுகொலைகளைச் செய்தவர்கள் மனித நாகரிகமற்ற, காடைத்தனம் கொண்ட வெறியர்கள் என்பதை உலகம் நன்கு அறியும். 83 ஆம் ஆண்டு 53 அரசியல் தமிழ்க் கைதிகள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை மீண்டும் ஒருமுறை தமிழ்ப்பேசும் மக்களுக்கு இக் காடையர்களின் கைவரிசை நினைவுபடுத்தியுள்ளது. அன்றைய சம்பவத்தினை அன்று ஆட்சியில் இருந்த அரசு பொறுப்புடன் நடந்திருந்தால் தடுத்திருக்க முடியும்; அல்லது நடைபெறாது காத்திருக்க முடியும். இன்று நடந்த இக்கோர சம்பவத்துக்கான துணிச்சல் ஓர் அரசியல் பின்னணியில் இருந்தே வழங்கப்பட்டிருக்கின்றது என்பது எந்த ஐயப்பாடும் இல்லாமல் புலனாகிறது.

அரசினால் அமைக்கப்பட்ட புனர்வாழ்வு முகாமிலேயே மனித உயிர்களுக்குக் குழி தோண்டப்படுகின்ற இந்த நிகழ்வு உலகம் வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும். தமிழ்ப் பேசும் மக்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லையென்ற எண்ணத்தை இப்படுகொலைகள் உண்மையாக்கியுள்ளன.

இந்தப் படுகொலைகளுக்கான சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்திச் சரியான தண்டனை வழங்கச் சட்டமும் அரசும் முனைப்பாகச் செயற்பட வேண்டும் என்பதைத் தமிழ்ப் பேசும் மக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள் — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தில்

# தவற விடப்பட்ட பொருள்கள் உரிமை கோரப்படவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 30

நல்லூர்க்கந்தன் வருடாந்த உற்சவ காலத்தில் அடியார்களினால் ஆலயச் சூழலில் தவறவிடப்பட்ட பலபொருள்கள் இன்னும் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் எவரும் உரிமை கோராத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்க ஆபரணங்கள், கைக் கடிகாரங்கள், அடையாள அட்டைகள், பணமுடிச்சுகள், காற்சங்கிலிகள், வீட்டுத் திறப்புகள். மோட்டார் சைக்கிள் திறப்பு, சைக்கிள் திறப்புகள் போன்ற பொருள்கள் உரியவர்களிடம் வழங்கப்படுவதற்காக மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பொருள்களைத் தவறவிட்டோர் நாளை 31 ஆம் திகதிக்கு முன்னர் நாவலர் மண்டபத்தில் தற்காலிகமாக இயங்கும் மேற்படி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (இ-5)

# பொருளாதார அபிவிருத்திக்கு சரியான பாதை அவசியம்

## சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, ஒக். 30

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைச் சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்லுமாறு புதிய அரசாங்கத்தை சர்வதேச நாணய நிதியம் கேட்டுள்ளது.

அந்த நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நதீமுல் ஹக் மேற்கண்டவாறு அரசிடம் கோரியுள்ளார்.

தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும்—

அரச நிறுவனங்களை உடனடியாக மறுசீரமைக்கவேண்டும் என்றும்—

அவர் கேட்டுள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினால் அமைக்கப்பட்டிருக்கும் கூட்டரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை தொடர்பில் சந்தை வட்டாரங்களில் நிலவும் நம்பிக்கையீனங்களைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று அவர் ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

துரித பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கான திட்டங்களை அரசு உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ஐ-3)

## தனிப்பட்ட பரீட்சார்த்திகள் கவனத்துக்கு

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் புதிய பாடத் திட்டத்திற்கமைவாக யாழ். கல்வி வலயத்தில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளை தாம் இணைந்துள்ள பாடசாலையில் எதிர்வரும் புதன்கிழமை சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் தொடர்பான எழுத்துச் சோதனைகள், ஒப்படைகள், செயற்றிட்ட ஆவணங்களை இதுவரை தாம் இணைந்துள்ள பாடசாலைகளில் சமர்ப்பிக்காதிருந்தால் அவற்றின் இறுதி மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு வசதியாகக் குறிப்பிட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-5)

# உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக்கழகத்தினால் அமரர் சு ஸ்ரீபாஸ்கரன் ஞாபகார்த்தமாக நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ ஆனைக்கோட்டை யூனியன் வி.க. எதிர் இளவாலை யங்ஹென்றிஸ் வி. க.

★ ஏழாலை ஞானமுருகன் வி. க. எதிர் நவாலி சென். பீற்றர்ஸ் வி.க. (ஐ-86)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டங்களிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகள் இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

### 18 வயதுப் பிரிவு

★ யூனியன் கல்லூரி எதிர் மல்லாகம்மகாவித்தியாலயம்.

★ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

★ ★ ★

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் — 7 பேர் பங்குகொள்ளும் அணிகளுக்கு இடையிலான— உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4 மணி— சென்.மேரிஸ் வி. க. எதிர் ஞானகலா வி. க.

★ பிற்பகல் 5 மணி— ஒலிம்பிக் வி. க. எதிர் சென். ஹென்றீஸ் வி.க. (ஐ-3)

★ ★ ★

யாழ்ப்பாணக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் இன்றும் நாளையும் காலை 8.30 மணி முதல் யாழ். இந்து மைதானத்தில் இடம் பெறவுள்ளன. ஆட்டங்களின்விவரம் வருமாறு:-

### இன்று

★ 16 வயதுப் பிரிவு — புனித ஜேம்ஸ் ம. வி. எதிர் நாவாந்துறை றோ. க. வி.

★ 18 வயதுப் பிரிவு — புனித ஜேம்ஸ் ம. வி. எதிர் யாழ். மத்திய கல்லூரி.

### நாளை

★ 16 வயதுப் பிரிவு — யாழ். மத்திய கல்லூரி எதிர் புனித ஜோசப் வித்தியாலயம்.

★ 18 வயதுப் பிரிவு — நாவாந்துறை றோ. க. வி எதிர் புனித சாள்ஸ் ம. வி.

★ ★ ★

நல்லூர் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மூன்றாம் இடத்தைத் தெரிவு செய்வதற்காக இன்று காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் 16 வயதுப் பிரிவில் பெரியபுலம் ம. வி. யும் கொண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயமும் மோதுகின்றன. (ஐ-3)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்

**ந. கெங்காதரனின்**

அன்புத் தந்தை

**சி. நவநீதகிருஷ்ணன்**

அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2 ஆம் வருட முகாமைத்துவ மாணவர்கள்
முகாமைத்துவ வர்த்தக பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(80019)

## 24 வருடங்கள் தொடர்ந்து பதவியில் இருந்த

# மேற்கு வங்க முதல்வர் பதவியிலிருந்து விலகினார்!

கல்கத்தா, ஒக். 30

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் தொடர்ந்து 24 ஆண்டுகளாக முதலமைச்சர் பதவியை வகித்து வந்த ஆளும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜோதிபாசு முதல்வர் பதவியிலிருந்து நேற்று விலகினார்.

மேற்கு வங்க கம்யூனிஸ்ட் மந்திரிசபை அனுமதி அளித்ததை அடுத்து ஆளுநர் வீரங்கேஷாவிடம் தனது பதவி விலகல் கடிதத்தை ஜோதிபாசு சமர்ப்பித்தார்.

அந்தக் கடிதத்தில், உடல் நலக்குறைவு காரணமாக, தன்னால் தொடர்ந்து முதலமைச்சர் பதவியை வகிக்க முடியவில்லை என்று ஜோதிபாசு குறிப்பிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இவரது பதவி விலகலை அடுத்து; தற்போதைய துணை முதலமைச்சர் புத்ததேட பட்டச் சாவுவை முதலமைச்சராக்க மேற்கு வங்க இடதுசாரிக்கட்சி தீர்மானித்துள்ளதை அடுத்து புத்ததே அடுத்த மாதம் 6 ஆம் திகதி புதிய முதலமைச்சராகப் பதவி யேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதலமைச்சர் பதவியில் இருந்து விலகுவதையொட்டி ஜோதிபாசு செய்தியாளர்களிடம் பேசினார்.

24 ஆண்டுகள் தொடர்ந்து முதலமைச்சர் பதவி வகித்ததை சாதனையாகக் கருதவில்லை என்று அப்போது தெரிவித்த ஜோதிபாசு ஜனநாயக நடைமுறை உள்ள நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியை தொடர்ந்து 5 முறை தேர்தல்களில் வெற்றி பெறச் செய்து ஆளும் கட்சியாக்கியதை வேண்டுமானால் சாதனையாகக் கருதலாம் என்று கூறினார்.

# அ. தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் கருணாநிதிக்கு ஆயுள்தண்டனை!

## இப்படி ஜெயலலிதா கூறுகிறார்!!

சென்னை, ஒக். 30

விரைவில் நடக்கவுள்ள தமிழக சட்ட சபைக்கான தேர்தலில் அ. தி. மு. க. வெற்றி பெற்று ஆட்சியில் அமருமானால் தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுவார் என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தி. மு. கவும், தமிழக ராஜீவ் காங்கிரஸும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

தி. மு. கவின் செயலாளர், பேராசிரியர் அன்பழகன் வெளியிட்ட அறிக்கையில் ஜெயலலிதா இவ்வாறு கூறியிருப்பது அரசியல் நாகரிகம் அற்ற செயல் என்றும்,

தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி செய்தியாளர்களிடம் பேசுகையில் ஜெயலலிதாவின் பேச்சு, அவரது சர்வாதிகாரப் போக்கைக் காட்டுகின்றது என்றும் தெரிவித்துள்ளனர். (ஒ-8)

## ஒசாமா பின் லேடனைத் தாக்குவதற்கு

# வான் பரப்பை உபயோகிக்க அமெரிக்காவுக்கு பாக். தடை!

இஸ்லாமாபாத், ஒக். 30

ஒசாமா பின்லேடன் மீது தாக்குதல் நடத்தத் தமது வான் பரப்பை அமெரிக்கா பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் சதார் செய்தியாளர்களிடம் பேசிய போது இதனை வலியுறுத்தினார்.

ஆப்கானிஸ்தானில் தங்கியுள்ள பின்லேடனின் மீது தாக்குதல் நடத்த, பாகிஸ்தானின் வான் பரப்பைப் பயன்படுத்த இரு வருடங்களின் முன்னர் அமெரிக்கா அனுமதி கோரியதாகக் கூறப்படுவதை மறுத்த சதார் அமெரிக்கா அனுமதியின்றி பாகிஸ்தானின் வான் பரப்பை உபயோகித்தால், அது குறித்து சர்வதேச ரீதியான ஆட்சேபனை எழுப்பப்படும் என்றும் தெரிவித்தார்.

சவூதி அரேபியக் கோடீஸ்வரரான ஒசாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானில் தங்கியிருந்து கொண்டு தனது ஆள்கள் மூலமாக அமெரிக்க நிலைகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும், சமீபத்தில் யேமன் நாட்டுத் துறைமுகத்தில் தரித்து நின்ற அமெரிக்கப் போர்ப் படகு மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கும் பின்லேடனே சூத்திரதாரி என்றும் அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)


## வாழ்த்துகிறோம்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியை கோண்மை தப்பாமல் புரியும் தலையாய - அதிபர் சிறப்போடு பட்டம் ''சமாதான நீதிவான்'' சிறந்தோங்கி வாழியவே!

மாணவ முதல்வர்கள்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(80015)



உ

## அருள்மிகு அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

# பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

நிகழும் விக்கிரம வருடம் ஐப்பசி மாதம் 21 ஆம் திகதி (06—11—2000) திங்கட்கிழமை காலை 10.30 மணி தொடக்கம் 10.35 வரையுள்ள சதய நட்சத்திரமும் தசமி திதியும் சித்த யோகமும் கூடிய தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில் பாலஸ்தாபனம் நிகழத் திருவருள் பாலித்துள்ளமையால் அடியார்கள் அனைவரும் மேற்படி நிகழ்வில் கலந்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திருப்பணிச் சபை.

(80013)


## காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவிக்கு

# சோனியா காந்தியை எதிர்த்து ஜிதேந்திர பிரசாத் போட்டி!

புதுடில்லி, ஒக். 30

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கான உட்கட்சித் தேர்தலில் போட்டியிடும் சோனியா காந்தியை எதிர்த்துப் போட்டியிட மூத்த காங்கிரஸ் தலைவர் ஜிதேந்திர பிரசாத் நேற்றுக் காங்கிரஸ் கட்சித் தலைமையகத்தில் வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜிதேந்திரபிரசாத் தேர்தலில் போட்டியிருப்பது ஆரோக்கியமானதென்று தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு ஏகமனதாக ஒருவரைத் தெரிந்தெடுப்பது வழக்கம். ஆனால் சோனியா காந்தி மீது காங்கிரஸின் மூத்த தலைவர்கள் கொண்டுள்ள அதிருப்தி தற்போது தலைவர் பதவிக்குத் தேர்தல் நடத்தும் நிலையை உருவாக்கியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சோனியா காந்தி நேற்று முன்தினம் தலைவர் பதவிக்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## கியூபா மீதான சில தடைகள் நீக்கம்

வாஷிங்ரன், ஒக். 30

கியூபாவுக்கெதிரான தடைகளில் ஒரு பகுதியை விலக்கிக் கொள்ளும் கட்டளைப் பத்திரம் ஒன்றில் அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் கைெயழுத்திட்டார்.

இதன் மூலம் கியூபாவுக்கு மருந்துகள் மற்றும் உணவு வகைகளை அமெரிக்காவில் இருந்து ஏற்றுமதி செய்ய வழி செய்யப்பட்டுள்ளது.

இதே சமயம் இந்த ஏற்றுமதியில் கட்டுப்பாடுகள் இருப்பதாக வர்த்தகர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## 12 பேர் பலி

டாக்கா, ஒக். 30

பங்களாதேஷில் நேற்று முன்தினம் தீவிரமான புயல் தாக்கியதில் 12 பேர் பலியாகினர் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர்.


## வாழ்த்துகின்றோம்

கோவையின் மகவாம் கிறிஸ்தவக் கல்லூரி அவனியில் ஒளிர அயராதுழைத்து ''சமாதான நீதிவான்'' பட்டம் பெற்ற எம் அதிபர் வாழியவே!

உயர்தர மாணவர்கள்,

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(80016)



அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் திருப்பணிச் சபை

# பகிரங்க ஏல விற்பனை

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் புனரமைப்பின் பொருட்டு அகற்றப்பட்ட நல்ல நிலையில் உள்ள தரமான பின்வரும் பொருள்கள் (12—11—2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு ஆலய முன்றிலில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1) 6''×4'' தீராந்தி வளைகள் 600 அடி
2) 15 அடி இடைவெளிக்குரிய ஊசிக்கால் 4
3) 18 அடி இடைவெளிக்குரிய ஊசிக்கால் 13
4) 20 அடி இடைவெளிக்குரிய ஊசிக்கால் 11
5) 22 அடி இடைவெளிக்குரிய ஊசிக்கால் 4
6) பாவிக்கப்பட்ட தரமான பனை மரங்கள்
7) பழைய கோபுர மரக்கதவுகள்
8) பனை மரச் சிராய் விறகுகள்

பார்வையிட விரும்புவோர் ஆலயச் செயலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

- திருப்பணிச் சபை.

(80012)


# கோயில் கொள்ளை தொடர்பாக அர்ச்சகர் கைது

மதுரை, ஒக். 30

தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற கோயிலில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாக சம்பந்தப்பட்ட கோயிலின் அர்ச்சகர் உட்பட 4 பேரைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

ராதாபுரம் என்ற ஊரில் அமைந்துள்ள புராதனப் பெருமைமிக்க ஸ்ரீவரகுணபாண்டீஸ்வரர் கோயிலில் கடந்த திங்கட்கிழமை பஞ்சலோக சுவாமி சிலையும், கிரீடம் உட்பட 35 0 லட்சம் ரூபா பெறுமதியான தங்கம், வெள்ளிநகைகள் ஆகியவையும் திருடப்பட்டுள்ளதாகக் கோயில் நிர்வாகிகளால் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக விசாரணை நடத்திய பொலீஸார் இந்தத் திருட்டுத் தொடர்பாக அந்தக் கோயிலின் அர்ச்சகரான சுந்தர்பட்டர் உட்பட 4 பேரைக் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து களவு போன சிலை மற்றும் நகைகளையும் மீட்டுள்ளனர். (ஒ-8)

# இஸ்ரேலுடன் உறவைத்துண்டிக்க கோரிக்கை

இஸ்ரேலுடனான உறவுகளை இஸ்லாமிய நாடுகள் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று பாகிஸ்தானில் நடைபெற்ற உலக முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஜெருசலேத்தைத் தலைநகராகக் கொண்ட பலஸ்தீனத் தனிநாடு அமைக்க முழு ஒத்துழைப்பு வழங்குவதென்றும் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. (ஒ-8)


## கண்ணீர் அஞ்சலி

மல்லாகம் வர்த்தக சங்க உறுப்பினர்

கி. பரமகுருநாதன் (குரு)

(காங்கேயன் வெதுப்பகம், மல்லாகம்)

அவர்களது அன்புத் தந்தை

## அமரர் தம்பிஜயா கிருஷ்ணரட்ணம்

அவர்களின் மறைவை யொட்டி அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மல்லாகம் வர்த்தக சங்கம்

(80914)

## முன்பள்ளி
## பாலர் ஆசிரியராகப் பயிற்சி

தபால் வழி ஆறுமாதப் பயிற்சி
க.பொ.த. சாதாரண தரம் கடைசித்தகைமை

விவரங்களுக்கு:

பாலர் ஆசிரியர் சங்கம்,
கொக்குவில்.

(79349)



## யா/ டிறிபேக் கல்லூரி - சாவகச்சேரி
## அபிவிருத்திச் சங்க
## செயற்குழுக் கூட்டம்

காலம்:- 01 - 11 - 2000 புதன் காலை 10 மணி
இடம்:- நிரு கல்வி நிலையம், கோண்டாவில்

தயவு செய்து செயற்குழு உறுப்பினர் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

மு. நாகேந்திரராஜா — தலைவர்
சு. கணபதிப்பிள்ளை — செயலாளர்

(79933)



## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலைய கட்டட வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

1 ஆம் பரிசு இல- 9815
2 ஆம் பரிசு இல- 5400
3 ஆம் பரிசு இல- 1517
4 ஆம் பரிசு இல- 2274
5 ஆம் பரிசு இல- 4773

பத்து ஆறுதல் பரிசில்கள்


| | |
|---|---|
| 1. — 4231 | 6. — 6575 |
| 2. — 6171 | 7. — 3022 |
| 3. — 3614 | 8. — 4128 |
| 4. — 6455 | 9. — 9959 |
| 5. — 9918 | 10. — 3488 |

மேற்படி இலக்கங்களுக்குரிய அதிர்ஷ்டச் சீட்டைச் சமர்ப்பித்து எதிர்வரும் 26-11-2000 க்கு முன்பதாக பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும். இத் திகதிக்குள் பெற்றுக்கொள்ளத் தவறின் பரிசில்கள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என்பதை அறியத் தருகிறோம். 30-11-2000 அன்று நிலைய முன்றிலில் ஏலத்தில் விடப்படும்.

செ. பிறேமன்
செயலாளர்

(சி/13608)


## 2 ஆம் வருட நினைவஞ்சலி



உதயம் 25 — 03 — 1943
அஸ்தமனம் 23 — 10 — 1998

அமரர்
### கந்தையா தயாபரன் (சங்கானை)
இளை முகாமையாளர்¶ சங்கானை,
ப. நோ. கூ. சங்கம்.

திதி: 30-10-2000

உங்கள் வரவைக்காண
வழிமேல் விழிவைத்தேன்
வந்தது நீங்களல்ல
உங்கள் மரணச் செய்தி
விதியின் வழியினிலே நீங்கள்
விண்ணகத்தில் சேர்ந்து விட்டீர்கள்.
உங்கள் கனிமுகம் காணாது
கலங்கித் தவிக்கின்றேன்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்,
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி,
மற்றும் உறவினர்கள்.

உரும்பிராய் தெற்கு. (79898)

## தரப்படுத்தல் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 30

அண்மையில் நிரந்தர நியமனம் பேற்ற பட்டதாரி மொழிப்பெயர்ப்பாளர்களுக்கு தரப்படுத்தல்பரீட்சை நடைபெறவுள்ளது.

கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் மேற்படி பரீட்சை எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (இ-ரி-5)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

காரைநகர், ஒக். 30

ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஜே.எக்ஸ், செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்

(இ-73)

## சிறுவர் தின விழா

காரைநகர், ஒக். 30

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச சிறுவர் தினவிழா எதிர்வரும் புதன்கிழமை காலை 10 00 மணிக்கு நாரந்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறும்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், சிறுவர் பாதுகாப்பு நிதிய நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ஜி. அல்பிரட் சிறப்பு விருந்தினராகவும் தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஈ. ஸ்ரனிஸ்லாஸ், ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அதிகாரி கே இரட்ணசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

சிறுவர் தினம் தொடர்பாக பாடசாலைகள் மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கல் மற்றும் கலைநிகழ்ச்சிகள் ஆகியவையும் இடம்பெறும்.

(இ-73)

## கோரிக்கை

அச்சுவேலி, ஒக். 30

அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்திற்குச் செல்லும் வீதியை உடன் திருத்தி அமைக்குமாறு பொதுஸ்தாபனங்கள் வலி. கிழக்குப் பிரதேச சபையிடம் கோரியுள்ளன.

அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்துக்கு செல்லும் வீதி கனரக வாகனங்களின் பாவனைக்கு உள்ளாகிச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. (இ-11)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை, கால், அவியல், சருமநோய்கள், பாரதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர்.

சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459

(79975)


வல்வை
## வயலூர் முருகப்பெருமான் தேவஸ்தான
## ஸ்கந்தஷஷ்டிப் பெருவிழா

வல்வை வயலூர் முருகப் பெருமான் தேவஸ்தானத்தில் ஸ்கந்த ஷஷ்டி விரத 6 நாள்களும் தினமும் காலையும் மாலையும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

மாலை பூஜையைத் தொடர்ந்து
4 மணி முதல் 5. 15 மணி வரை

ஆசிரிய மணி சைவப்புலவர்
வரணியூர் P. கமலநாதன் அவர்கள்

''கந்தவேள் பெருமையும் கந்தபுராண மகிமையும்'' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

ஆலயப் பிரதம குரு
வல்வை.

(80004)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2000
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
### செல்வன் சிவஞானம் மேருபரன்
139 புள்ளி

மேற்படி மாணவனைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

சித்திமார், சித்தப்பாமார்,
அம்மா, அப்பா, மாமா, மாமி
குடும்பத்தினர்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(80005)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா / திருக்குடும்ப கன்னியர் மடம்
ஆங்கிலப் பாடசாலை

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2000
யோ. பரமேந்திரன் - மாலினி
தம்பதிகளின் புதல்வி
### யோ. அ. மினோலின் 136 புள்ளி

மேற்படி மாணவியைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரை வழி நடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

மம்மா, மாமாமார்,
மாமிமார், அக்காமார். தம்பிமார்.

(79992)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஒன்றிய உப தலைவர்
ந. சுகந்தன்
அவர்களின் அன்புத் தந்தை
### திரு. நவநீதகிருஸ்ணன்

அவர்களின் மறைவையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளையும் அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

மருத்துவ பீட மாணவர் ஒன்றியம்.

(80006)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சி. சிவசம்பு
(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர்,
இலங்கை மின்சார சபை — சுன்னாகம்)

27 — 10 — 2000 அன்று கனடாவில் காலமான அன்னாரது செய்தி அறிந்து ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளோம்.

அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அணிஞ்சிலடி நண்பர் குழாம்

அணிஞ்சிலடி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

(80008)

# உதயன்

## தமிழர்களின் காதில் பூ!

பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்காவும் ஐக்கியதேசியக் கட்சியின் கொறடாவும் முன்னாள் அமைச்சருமான டிரோன் பெர்னாண்டோவும் நான்கு தடவைகள் சந்தித்துப் பேசிவிட்டனர். இனியும் பேச்சு நடத்தவுள்ளனர்.

ஆளுங்கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியும் சேர்ந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாகவே இந்தப் பேச்சுக்கள் நடைபெறுவதாகத் தகவல்கள் வெளிவந்தன.

அவ்வாறில்லை — தேர்தல், பொலிஸ், பொதுச்சேவை ஆகியனவற்றுக்குச் சுதந்திரமான ஆணைக்குழுக்களை நியமித்து இத்துறைகளில் நிலவும் அரசியல் தலையீடு, செல்வாக்குகளைக் களைந்து ஜனநாயகப் பண்புகளைக் கொண்ட சிவில் சமுதாய அமைப்பை பலப்படுத்துவதற்கு இரு சாராரும் ஒத்துழைப்பதே பேச்சுக்களின் நோக்கம் என்று பின்னர் கூறப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூடி மேற்சொன்ன ஆணைக்குழுக்களை அமைக்க எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கி, அதுவரை வெளியில் இருந்து அரசுக்கு ஆதரவு கொடுக்கவும் முடிவு செய்தது.

அதே வேளையில —

பிரதமருக்கும், டிரோன் பெர்னாண்டோவுக்கும் இடையில நடைபெற்ற பேச்சுக்கள், இனி நடைபெறவுள்ள பேச்சுக்கள் அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு ஐக்கியதேசியக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெறும்பொருட்டே என்று தெரிவித்திருக்கிறார், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி. எம். ஜெயரத்னா.

பௌத்த பீடாதிபதிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது குறித்து முடிவு சொல்வதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளதாம்.

இந்தத் தரப்புப் பேச்சுக்களின் உண்மையான நோக்கம் என்ன என்பது குழப்பமாக உள்ளது. இவை மூன்றையும் இப்போதைக்குப் பின்தள்ள வேண்டும். போரை நிறுத்துவது, இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வை வகுப்பது, அதற்கு பௌத்த மகா சங்கம் உட்பட மக்களின் ஆதரவைத் திரட்டுவது ஆகியவற்றிலேயே இரண்டு பிரதான கட்சிகளும் முதலில் நாட்டம் கொள்ள வேண்டும்.

அவ்வாறில்லை என்று மூன்றில் எதில் நாட்டம் செலுத்தினாலும், வடக்கு — கிழக்கு இந்த நாட்டின் ஒரு பகுதி அல்ல என்பதனை இரண்டு கட்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன என்பதே அர்த்தமாகிவிடும்.

நாட்டில் ஒரு பகுதி மீது போர் நடத்தப்படுகிறது. கோடிக் கணக்கான நிதி போருக்கு ஒதுக்கப்படுகிறது.

இவ்வேளையில் போரை நிறுத்துவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதிலும், பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஒன்றை வகுப்பதிலுமே முதலில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அதன் பின்னரே இப்போது ஆளும் தரப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் யோசிக்கின்ற ஏனைய விடயங்கள் குறித்துச் சிந்திக்கவேண்டும்.

தேசிய அரசாங்கம், சுதந்திர ஆணைக்குழுக்கள் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றாத அரசமைப்பு ஆகியனவற்றில் இரண்டு கட்சிகளும் அக்கறை கொள்வது இரண்டு சாராரும் சேர்ந்து தமிழ் மக்களின் காதில் பூ வைப்பதாகவே முடியும்?

# சமுர்த்தித் திட்டம் அமுலாகும் போது 65 வீதமானோர் நிவாரணம் இழப்பர்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ். குடாவில் சமுர்த்தித் திட்டம் முழுமையாக நடைமுறைக்கு வந்ததும் தற்பொழுது உலர் உணவு நிவாரணம் பெறுபவர்களில் 65 சதவீதமானவர்களின் நிவாரணம் நிறுத்தப்படும்.

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற உணவு நிவாரணம் மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பான கலந்துரையாடலில் தெரிவித்தார்.

பிரதேச செயலர்கள், ப. நோ. கூ. சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள், மற்றும் திணைக்களத் தலைவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் இந்தக் கலந்துரையாடலில் மேலும் கூறியதாவது:-

மிகவும் வறிய நிலையில் வாழும் 35 வீதமான மக்களுக்கு மட்டுமே சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படும்.

ப. நோ. கூ. சங்கங்கள் நிவாரண விநியோகத்தில் மட்டும் தங்கியிராது தமது வியாபார நடவடிக்கைகளை விஸ்தரிக்க வேண்டும். தமது பிரதேசத்தின் தேவை கருதி புதிய புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விநியோகம் செய்வதற்கான சந்தை வாய்ப்புகளையும் சங்கங்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

குடாநாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இங்கிருந்து ஏற்றுமதி செய்யக் கூடிய பொருள்களை உரிய முறையில் பதனிட்டு பொதி செய்து கப்பல் மூலம் கொழும்பிற்கு ஏற்றுமதி செய்யலாம். நாட்டு கருவாடு போன்ற பொருள்களுக்கு சந்தை வாய்ப்பு அதிகமாக இருக்கிறது.

எனவே சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் தமது வியாபார யுக்திகளை மாற்றியமைத்துச் செயற்படுவதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்கள் தமது வியாபாரத்தை பெருக்கிக் கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் ஒவ்வொரு சங்கங்களுக்கும் ஏற்பட்ட நட்டங்களை மதிப்பீடு செய்து அறிக்கைகளைச் சமர்ப்பித்தால் காலப்போக்கில் நஷ்டஈடு வழங்குவதற்கு அவை உறுதுணையாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

பாண் உற்பத்தி இடத்துக்கிடம் வேறுபட்டுள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளது. 450 கிராம் நிறையுடைய பாண் உற்பத்தி செய்யப்பட வேண்டும். பாணின் நிறை இதற்கு குறைவாக இருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கு ஏற்ப பாண் உற்பத்தியாளர்கள் செயற்பட வேண்டும். இதனை கடைப்பிடிக்காத பேக்கறிகளுக்கான மா விநியோகம் நிறுத்தப்படும்.

ப. நோ. கூ. சங்கங்கள் பொது மக்களுக்கு தரமற்ற பொருள்களையோ, காலாவதியான பொருள்களையோ விநியோகம் செய்யக்கூடாது.

அரச களஞ்சியத்தில் இருந்து பொருள்களைப் பொறுப்பேற்பவர்கள் தரத்தைப் பரிசோதித்து அவற்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

வீடுகள் திருத்தம் மற்றும் புனரமைப்பு செய்வதற்கென 8 கோடியே 70 லட்சம் ரூபா யாழ். மாவட்டத்துக்கு வந்து சேரவுள்ளது. இந்த நிதி கிராமிய வங்கிகள் ஊடாக பயனாளிகளுக்கு வழங்கப்படும். இப்படி அவர் கூறினார். (இ-5)

## உடுவில் கல்விக் கோட்ட சமய அறிவுப்போட்டிகளில் இணுவில் பள்ளிகள் முன்னணி

வலிகாமம் தெற்கு, ஒக். 30

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடைபெற்ற வருடாந்த சமய அறிவுப் போட்டிகளில இணுவில் மத்திய கல்லூரி, இணுவில் இந்துக்கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் தலா 27 இடங்களைப் பெற்று முன்னணி வகிக்கின்றனர்.

நடைபெற்ற போட்டிகளில் 23 இடங்களைப் பெற்றுக் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மாணவர்கள் இரண்டாம் இடத்தை வகிக்கின்றனர்

ஏழாலை மகா வித்தியாலயம் 19 இடங்களையும், இராமநாதன் கல்லூரி 17 இடங்களையும், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் என்பன தலா 16 இடங்களையும் பெற்றுள்ளன.

உடுவில் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்ட இப்போட்டிகள் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றன.

மாணவர் மத்தியில் சமய அறிவை வளர்க்கும் நோக்குடன் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வரும் இப் போட்டியில், நீதிச் செய்யுள் மனனம் முற்றோதல், திருமுறைப் பண்ணிசை — புராணபடனம் கதாப்பிரசங்கம் மற்றும் தொண்டுபடும் செய்முறைப் போட்டிகளான மகரதோரணம் அமைத்தல், பல்வேறு வகையான மாலைகள் கட்டல், பூ, தானிய வகைகளைக் கொண்டு கோலங்கள் அமைத்தல் போன்ற சமய, கலாசாரம் சார்ந்த போட்டிகள் இடம்பெற்றன.

இப் போட்டிகளில் இணுவில் மத்தியகல்லூரி தலா 10 முதலாம், இரண்டாம் இடங்களையும், 3 மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டது இணுவில் இந்துக்கல்லூரி தலா 8 முதலாம் இரண்டாம் இடங்களையும் 9 மூன்றாம் இடங்களையும் பெற்றுக்கொண்டது. கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை 5 முதல் இடங்களையும் 4 இரண்டாம் இடங்களையும் 9 மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டது. (ஐ-152)

### நாளை

ஐப்பசி 15

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தி

பிற்பகல் 4.44 வரை.

நட்சத்திரம்: கேட்டை

முற்பகல் 12.24 வரை

சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 10.33—12.03

ராகுகாலம்: 3.03— 4.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## மக்கள் வங்கியில் மின் கட்டணம்

அச்சுவேலி, ஒக். 30

அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையில் மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-11)

### உதயவாக்கு

இறைவன் வெகுதொலைவில் இருக்கிறான் என்று நாம் கருதும்பொழுது அவன் இறுதியில் வெகு அருகிலே வந்து விடுகிறான்.

— எம். கிரிச்

## கந்தசஷ்டி உற்சவம்

பிரசித்தி பெற்ற நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் கந்தசஷ்டி உற்சவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சூரசங்கார உற்சவமும், 3 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் 4 ஆம் திகதி திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். (ஐ-17)

## முதியோர் சிறுவர் வார விழா

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டிலான முதியோர், சிறுவர் வார இறுதி நாள் விழா இன்று திங்கட்கிழமை யாழ். பிரதேச செயலக பணிமனையில் பிரதேச செயலாளர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும்.

யாழ். பிரதேச செயலகம் நடத்திய கவிதை, கட்டுரைப் போட்டியில் முதல் சிறந்த மூன்று இடங்களைப் பெற்றோருக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என யாழ் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் கே. வி சிவனேசன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

# செய்தித் துளிகள்

## விழிப்புலன் இழந்தோருக்கு அன்பளிப்பு

தென்மராட்சி, ஒக். 30

சர்வதேச வெள்ளைப் பிரம்புத் தினத்தையிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் விழிப்புலன் இழந்த மாணவர்களுக்கு கதிரைகளை அன்பளிப்பாக வழங்கினர்.

அன்றைய தினம் விழிப்புலன் அற்றவர்களுக்கு விருந்துபசாரமும் நடத்தப்பட்டதாகக்கழகத்தலைவர் லயன் கா. சற்குணதேவன் தெரிவித்தார். (ஐ-117)

## தென்னங் கன்று விநியோகம்

காரைநகர், ஒக். 30

நல்லூர் கமநல கேந்திர நிலையத்தினால் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட உள்ளன.

இந்தத் தென்னங்கன்றுகளை விநியோகிப்பதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ஐ-73)

## இடம்பெயர்ந்த மக்கள் திரும்புகின்றனர்

உரும்பிராய், ஒக். 30

உரும்பிராய், நீர்வேலி, அச்செழு பகுதிகளிலிருந்து வலிகாமம் மேற்குப் பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்றவர்கள் படிப்படியாகத் திரும்பத் தொடங்கியுள்ளனர். தினமும் கால்நடையாகவும் சைக்கிள்களிலும் பலர் திரும்பி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. (ஐ-154)

## பனம் விதை நடுவதற்கு ஏற்பாடு

நெடுந்தீவு, ஒக். 30

நெடுந்தீவு பனை அபிவிருத்திச் சங்கம் பனம் விதைகளை நடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பிரதேச சபையின் அனுசரணையுடன் இயங்கும் மேற்படி சங்கத்திற்குத் தேவையான பனம் விதைகளைத் தந்துதவுமாறு பிரதேசசபை பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-111)

## சாவகச்சேரி சங்கத்தானையில் உள்ள இத்தியடிப் பிள்ளையார் ஆலய நகைகள், சொத்துக்கள் சூறை!

தென்மராட்சி, ஒக். 30

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் கோவிலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான ஆலயத்திற்குச் சொந்தமான தங்க நகைகளும், வெண்கல, வெள்ளிப் பொருள்களும் காணாமற் போயுள்ளதாக அங்கு சென்று திரும்பியவர்கள் தெரிவித்தனர்.

சங்கத்தானை மீனாட்சி அம்பாள் ஆலய இரும்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 50 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் காணாமற் போயுள்ளதை அறிந்த இத்திபடிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர் கடந்த திங்களன்று ஆலயத்திற்குச் சென்றபோது ஆலய இரும்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு ஆலயத்திற்குச் சொந்தமான பொருள்கள் காணாமற் போயிருந்தது தெரியவந்ததாகத் தெரிவித்தனர்.

சங்கத்தானைப் பகுதியில் ஷெல்கள் வீழ்ந்ததை யடுத்து இப்பகுதி மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய பின்னர் அப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படாததால் ஆலயங்களின் சொத்துக்களை மீட்க முடியாமற் போனதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வகுப்புகள்

தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கில தட்டெழுத்து வகுப்புகள் புதிய பிரிவு 01-11-2000 புதன் கிழமை ஆரம்பம். தொடர்பு: 5, அம்மன் வீதி, (வைரவர் கோயில் முன்பாக) கந்தர்மடம், யாழ்ப்பாணம். (79970)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப பயில தபால் மூலமும் பயிற்சி. ஆசிரியர்: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (79955)

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டையில் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜோசப் இல.52/1, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (79972)

## படிவம்

தொழில் நுட்பக்கல்லூரிகளின் அனுமதிக்கான விண்ணப்பம் 2001 ஆம் ஆண்டு விற்பனையாகின்றது. படிவம் அளவு 13''x8'' விலை ரூபா 2.50 மொத்த வியாபாரிகளுக்கு கழிவு உண்டு பாரதி ,430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 021-3081 (C/13321)

## 2001 உங்களுக்கு எப்படி?

எங்கும் விற்பனையாகின்றது. வேலணை சோதிடர் V.A. சிவராசா வெளியிட்டது என்றுகேட்டு வாங்குங்கள். வக்கிர சனீஸ்வர மாற்றப் பலாபலன்களையும் தவறாமல் கேளுங்கள். சோதிடத்திற்கு 152B, அரசடி வீதி, கந்தர்மடத்தை நாடுங்கள். (79969)

## விற்பனைக்கு

ரியூட்டரித் தளபாடங்களும் விளம்பரப் பலகையும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சம்பியன் லேன், கொக்குவில் (K.K.S வீதிப் பக்கத்திலிருந்து 3 ஆம் வீடு) (79923)

## தவறிவிட்டது

செல்வநகர், நாவற்குழி, கைதடி என்னும் முகவரியைச் சேர்ந்த மகாலிங்கம் கயந்தன் என்பவரது விசேட அடையாள அட்டை (09103 9240) 27-10-2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ராஜா கிறீம் ஹவுஸ், கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (79996)

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த சச்சிதானந்தமூர்த்தி வசந்தகுமாரி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.685624[illegible] விசேட அடையாள அட்டை, தங்க நகைகள் என்பன கைப்பையுடன் யாழ். பெரியகடை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சச்சிதானந்தமூர்த்தி, 36, அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (80003)

இராசரத்தினம் அசோக்குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.782983512v) விசேட அடையாள அட்டை (இல.090700 7814) என்பன சீரணிக்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புகையிரத நிலைய முகாம், இணுவில் கிழக்கு எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (79993)

## நன்றி கூறுகின்றோம்

எம்மால் தவறவிடப்பட்ட பெறுமதிமிக்க தங்க நகையை கண்டெடுத்து மகாஜனக் கல்லூரி அதிபரிடம் ஒப்படைத்த இராஜரட்ணம் குணசீலன் (மகாஜனக் கல்லூரி, A/L வர்த்தகப்பிரிவு மாணவன்) அவர்களுக்கும், அதை எம்மிடம் ஒப்படைத்த அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பொ. யோகலிங்கம் குடும்பம்

*கிளப் லேன்,*
*தெல்லிப்பழை.*

(80002)

## மறைந்தும் மறையாத ஜோதியே
## பிறந்தநாள் நினைவுடன்
# 3 ஆம் மாத நினைவஞ்சலி

மலர்வு 1953 - 10 - 30



உதிர்வு 2000 - 07 - 16

## அமரர் கந்தசாமி தர்மேசன்

(திட்டமிடல் உதவியாளர் - வலிகாமம் கல்வி வலயம்,
உதவி மாவட்ட சாரண ஆணையாளர் - காங்கேசன்துறை மாவட்டம்)

இன்றைக்கு உங்கள் உதயநாள்
மகிழ்வோடு இனிய வாழ்த்துக்கள் கூறி
நெஞ்சம் மகிழ இனியவரே! நீங்களில்லை
மணக்கோலம் கொண்ட நாள் முதலாய்
வாழ்வில் வழிகாட்டி நின்றவரே - நாம்
சித்தங் கலங்க நீண்டவழி சென்று விட்டீரே ஐயா!
அப்பாவின் மதிமுகந் தேடித் தேம்பியழும் குழந்தைகளை
ஆற்றித் தேற்றுவார் யார் ஐயா?

ஆண்டவன் பாதார விந்தங்களிலே நீர் அமர்ந்து
அவன்தாள் சேர அஞ்சலித்து வாழ்த்துகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**

*"தூரன் இல்லம்"*
*தேவாலய வீதி,*
*மூளாய், சுழிபுரம்.*

(79999)

## இலக்கியக் கட்டுரைகள்

A/L மாணவர்களுக்கு வேண்டிய சிறுகதை மதிப்பீடு, இலக்கிய விமர்சனம் இரண்டையும் தரும் நூல 325 நாடகங்களும் 50 சிறுகதைகளும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை தரும் 38 கட்டுரைகள். (79976)

## பருத்தித்துறையில் கொல்களம்

நெல்லியடி ஒக்.30

4 லட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் பருத்தித்துறை கடற்கரை வீதியில், கால்நடைகளின் கொல்களம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வின்சன் டென்னடி மேற கொண்டு வருகின்றார். (இ-109)

## விசேட பொதுச்சபை கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-10)

## மோட்டார் சைக்கிள் கண்டு பிடிப்பு

அச்சுவேலி,ஒக்.30

ஆலய வீதியில் காணாமல் போன மோட்டார் சைக்கிள் இரண்டு மாதங்களின் பின்பு அச்சுவேலி பகுதியில் உள்ள கராஜ் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டது.

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழாவின் போது இந்த மோட்டார் சைக்கிள் காணாமற்போய் இருந்தது.

இந்த மோட்டார் சைக்கிள் அச்சுவேலி தெற்கு பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தும் கராஜ் ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்டது.

கிராம சேவையாளர் கொடுத்த தகவலை அடுத்து அச்சுவேலி பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-11)

## இடம்பெயர்ந்தோருக்கு கற்கோவளத்தில் குடிசைகள்

நெல்லியடி,ஒக்.30

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து கற்கோவளம் பகுதியில் தஞ்சமடைந்திருந்த 21 குடும்பங்களுக்கு, கெயர் நிறுவனம் குடிசைகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

குடிசைகள் கையளிக்கும் வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4மணியளவில் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலைக்கு அருகில் இடம்பெற்றது.

கெயர் நிறுவன திட்ட உத்தியோகத்தர் எஸ். கதிர்காம நாதன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், கெயர் நிறுவன யாழ் மாவட்ட இணைப்பாளர் ஒஷே கலந்து கொண்டார். (இ-109)

# நாவலர் வழியில் நற்றமிழ் காக்கும் ஐயா! வாழி



நாவலர் வழியில் நின்றே ஐயா!
நற்றமிழ் நூல்கள் பலவும் யாத்து
தேவரின் நெறியில் நாளும் வாழ்ந்து
தேன் தமிழ் பரப்பி வாழும்
மாதவ வள்ளல் அருட்கவி ஐயா!
மாண்புடன் கந்தபுராண காவியத்தை
தீதற ஆக்கித் தந்தே சைவத் தமிழருக்கு
தெய்வ ஆசிகள் சேர்த்தார் வாழி!

- மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் -

அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்களால் ஆக்கிய *''கந்தபுராண வசன காவியம்''* இன்று வெளிவருவதை, விழா நடப்பதையிட்டு அர்ச்சனாவின் நல் வாழ்த்துக்கள்!

## அர்ச்சனா நகையகம்

118, கஸ்தூரியார், வீதி, யாழ்ப்பாணம்.

(C/13600)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 21 - 11 - 1937



மறைவு 30 - 09 - 2000

## அமரர் பொன்னையா குகதாசன்

(பிரபல கட்டடக் கலைஞர்)

"மீளாத்துயில் கொள்ளும் அன்புத் தெய்வமே!
மூவிரு பிள்ளைகளை அன்னையிடம் ஒப்படைத்து,
இறையருள் வேண்டி அவனடி சேர்ந்தாய் - நின்
புனித ஆன்மா சாந்திபெற கூடி நாம் பிரார்த்திக்கின்றோம்"

இன்று (30-10-2000) திங்கட்கிழமை அல்வாய் சாமணந்தறை ஆலடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும். மதிய போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்

*"கேமாலயம்",*
*அல்வாய் தெற்கு, அல்வாய்.*

(79944)

# திருமண வாழ்த்து







மணமகன்
**நா.ரகுபதி**

மணமகள்
**கா.கலாமதி**

இன்று (30.10.2000) திங்கட்கிழமை கொழும்பு தெஹிவளை கொன்ஹோட் கல்யாண மண்டபத்தில் இணையும் மணமக்களை பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

"இராஜகிரி"
பொற்பதி லேன்.
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

அம்மா,
அக்காமார், அண்ணாமார், அண்ணிமார்,
அத்தான்மார், மாமா, மருமக்கள்.

(79858)

## பண்டாரவளைப் படுகொலைச் சம்பவம்

# ஐ.நா.வின் கண்காணிப்பின் கீழ் சர்வதேச ஆணைக்குழு நிறுவுக!

## வன்னியில் இடம்பெற்ற கண்டனப் பேரணியின் இறுதியில் கோபி அனானுக்கு மகஜர்

வவுனியா,ஒக்.30

பண்டாரவளை,விந்துணுவெவ தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை நடத்தப்படவேண்டும். இதற்காக ஐ.நாவின் கண்காணிப்பின் கீழ் சர்வதேச ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும். தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு காணப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு வன்னியில் இருந்து அனுப்பப்பட்ட மகஜர்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளைப் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து மல்லாவியிலும் புதுக்குடியிருப்பிலும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கண்டனப்பேரணிகளின் இறுதியில் இந்த மகஜர்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

வன்னிப் பிரதேசத்தின் வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் இந்தப் பேரணிகளை ஏற்பாடு செய்திருந்தது.

### புதுக்குடியிருப்பில்

புதுக்குடியிருப்பு கந்தசாமி கோயில் முன்றலில் இருந்து காலை 10 மணிக்கு ஆரம்பித்த கண்டனப் பேரணி செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் புதுக்குடியிருப்பு அலுவலகத்தை முதலில் சென்றடைந்தது. அங்கு செஞ்சிலுவைக்குழுவிடம் கண்டன மகஜரின் பிரதி கையளிக்கப்பட்டது. அங்கிருந்து புறப்பட்ட பேரணி முல்லைத்தீவு அரசாங்க அதிபருடைய பணிமனையைச் சென்றடைந்தது.

அங்கு புதுக்குடியிருப்பு பிரதேச வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் அ.வேதாரணியம்பிள்ளை தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. முல்லை மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியச் செயலாளர் வே.சிவனடியார் ஐ.நா. செயலாளர் கோபி அனான் மற்றும் இலங்கை ஜனாதிபதிக்குமான கண்டன மகஜரைக் கூட்டத்தினர் மத்தியில் வாசித்தார். பின்னர் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். சுந்தரத்திடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

பேரணியில் கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பதாதைகள், சுலோக அட்டைகள் என்பவற்றைத் தாங்கிச் சென்றதுடன் அரசின் இனப்படுகொலை நடவடிக்கையைக் கண்டித்து கோஷங்களை எழுப்பிச் சென்றனர்.

போர்முனையின் தோல்விக்கு சிறைக்கூடத்தில் வேட்டையா? புத்தரின் சித்தாந்தம் தமிழர் இரத்தம் குடிப்பதா? சர்வதேசமே கோரக் கொடுமைகளை விழித்துப்பார் என்பன போன்ற கோஷங்கள் அங்கு முழங்கப்பட்டன.

பாடசாலை மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், கூட்டுறவாளர்கள், பொதுமக்கள் என பல்தரப்பட்டவர்களும் இந்தக் கண்டனப் பேரணியில் கலந்துகொண்டனர்.

### மல்லாவியில்

மல்லாவியில் நடைபெற்ற கண்டனப் பேரணியில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் கலந்துகொண்டார்கள். கண்டனப் பேரணியில் சென்றவர்கள் "கொல்லாதே, கொல்லாதே அப்பாவிகளைக் கொல்லாதே", "யுத்தத்தில் தோல்வியென்றால் கைதிகளைக் கொல்லாதே" போன்ற கோஷங்களை முழங்கிச் சென்றார்கள்.

மல்லாவியில் உள்ள ஐ.நா. அகதிகளுக்கான தூதரக அதிகாரிகளிடம் ஐ.நா. சபையின் செயலாளர் கோபி அனானுக்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்தக் கண்டனப் பேரணிகளின் போது ஐ.நா.செயலாளர் கோபி அனானுக்கு அனுப்பப்படுவதற்காகக் கையளிக்கப்பட்ட மகஜரில் கடந்த 50 வருடங்களாக சிறிலங்காவை மாறி மாறி ஆட்சிசெய்து வந்த அரசுகளின் நேரடியான அல்லது மறைமுகமான ஆதரவோடும், அனுசரணையோடும் சிங்களப் பேரினவாதிகள் சிறுபான்மை இனமான தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான அடாவடித்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு பொது அமைப்புகளோடு நாமும் தங்களின் கவனத்திற்கு இவற்றைக் கொண்டு வந்துள்ளோம்.

இந்த வகையில் கடந்த 25ஆம் திகதி பண்டாரவளையில் புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைத்திருந்த இளைஞர்களை, சிங்கள அரசின் இராணுவத்துடன் சேர்ந்து கத்தி, கோடரிகள், வாள், பொல்லுகள் சகிதம் 1500 காடையர்கள் மிகவும் கொடூரமான முறையில் தாக்கி 29 பேரைக் கொன்றும் 35 பேரைக் குற்றுயிராக்கியும் எஞ்சிய 20 பேரை அந்த இடத்திலேயே தடயங்களின்றி அழித்தும் சிதைத்தும் உள்ளனர். முகாமையும் முற்றாகத் தீயிட்டு எரித்துள்ளார்கள்.

ஒவ்வொரு முறையும் சிறைக்கூடங்களில் இருக்கும் நிராயுதபாணிகளான தமிழ்க்கைதிகள் திட்டமிடப்பட்ட முறையில் கொடூரமான முறையில் தாக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும் அழிக்கப்படும் வேளைகளில் ஆட்சியில் இருப்பவர்கள் மௌனமாக இருப்பதுடன் ஏதோ ஒரு வகையில் இக்கொடூரத்தைப் புரியும் காடையர் குழுக்களுக்கு ஒத்தாசையாக இருந்துள்ளனர்.

இக்கொடூரம் 1983 வெலிக்கடையில் ஆரம்பித்து இன்றுவரை தொடர்கின்றது. கடந்த காலங்களில் இவ்வாறான படுகொலைகள் இடம்பெற்ற போதெல்லாம், எமது எதிர்ப்புணர்வுகளைத் தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். இருந்தபோதிலும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆட்சியில் இருப்பவர்கள் உடன் நடவடிக்கைகளை எடுப்பதாகவும் இது போன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் தொடராது என்றும் பொய்யான உறுதிமொழிகள் உங்களுக்கு வழங்கி வந்துள்ளார்கள்.

இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் நிறுத்தப்படுவதற்கு பதிலாக உங்களுக்கு வழங்கப்படுகின்ற உறுதி மொழிகள் இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுவதற்கு ஊக்கம் அளிக்கின்றன என்பதை வேதனையுடன் நாங்கள் உணர்கின்றோம்.

உலகிலே பாதிக்கப்பட்டவர்களின அவலங்களைப் போக்கவும் அவர்களின் மறுவாழ்வுக்காகவும் பொது அமைப்புகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்படுகின்ற போதிலும் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற கொலைகளும் கொடுமைகளும் எமக்கு மிகுந்த வேதனையைத் தருகின்றன.

ஐ.நா.மனித உரிமைகள் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் சார்பான மேலான நியதிகள் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ஸ்ரீலங்காவில் தொடர்ந்து வந்த அரசுகளினால் மீறப்பட்டுள்ளன.

ஆகவே ஐக்கிய நாடுகளின் கண்காணிப்பின் கீழ் ஒரு சர்வதேச ஆணைக்குழுவை நியமித்து ஒரு நீதியான விசாரணையை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் ஒரு நியாயமான தீர்வொன்றைத் தமிழ் மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும் -

இப்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது. (இ-4)

## நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

| நேற்றுவரை கிடைத்த நிதி:- | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | 162,802 |
| 1. ஓர் அன்பர் - மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் | 200 |
| 2. இ.திருக்குமரன் - சங்குவேலி தெற்கு, மானிப்பாய் | 200 |
| 3. சிறிதரன் இனியவன் - முதலியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம் | 200 |
| 4. ஓர் அன்பர் - உரும்பிராய் தெற்கு | 1,000 |
| 5. திரு.M.சோதிநாதன் - சித்தன்கேணி | 200 |
| 6. வே.வைத்திலிங்கம் - கரவெட்டி | 200 |
| 7. A.முரளிதரன் - கோண்டாவில் | 1,000 |
| 8. ஓர் அன்பர் - துன்னாலை மேற்கு கரவெட்டி | 250 |
| 9. திலீபன் குடும்பத்தினர் - இலங்கை | 105 |
| 10. அறநெறிப் பாடசாலை - வழக்கம்பரை | 150 |
| 11. சந்தியா - சங்கானை, பண்டத்தரிப்பு | 1,000 |
| 12. ஓர் அன்பர் - நீர்வேலி வடக்கு, நீர்வேலி | 200 |
| 13. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் - நல்லூர் பிரிவு நிர்வாகக் குழு | 500 |
| 14. V.சாந்தன் - கதிரிப்பாய், அச்சுவேலி | 200 |
| | 168,207 |

## இதய அஞ்சலி

### செல்வராஜா துரைராஜா (ராஜன்)

(24.10.2000)

பிள்ளைக் குணம் கொண்ட உந்தன்
பிஞ்சு முகத்தை இனவாதம் சிதைத்ததோ!
உனைப் பார்த்திருந்த எங்களுக்கு - அத்
துயர் சேதி வந்ததோ! தம்பீ!!
உள்ளம் வெதும்ப, கண்ணீர் மல்கிட
இதயம் சிந்தும் கண்ணீரால் அஞ்சலிகள்.

பிரிவின் துயரால்....

அக்கா செல்லா (யாழ்.பல்கலைக்கழகம்)வும்,

கொக்குவில். (80023) குடும்பத்தினரும்.

## 'கந்தபுராண வசன காவியம்' வெளியீடு

யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பியின் 'கந்தபுராண வசன காவியம்' வெளியீட்டு விழா இன்று மாலை 2.00மணிக்கு சத்திரம் ஞானவைரவர் தேவஸ்தான முன்றலில் யாழ் இந்துசமயப் பேரவை உபதலைவர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும்.

தொடக்கவுரையை யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் நிகழ்த்துவார். வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயரும் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக உயர்கல்வி பட்டப்பின்படிப்புத்துறை பீடாதிபதி அ. சண்முகதாஸும், பாராட்டுரையை யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் நா. ஞானகுமாரன், வி.செல்வரத்தினம் ஆகியோரும் சிறப்புரையை யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ஆறு.திருமுருகனும் வழங்குவர். காரை எம்.பி.அருளானந்தனின் கவிதாஞ்சலியும் இடம்பெறும். (ஐ-ரி)

## பக்கச் சார்பற்ற விசாரணை நடத்த கோருகிறது மன்னிப்புச் சபை!

பண்டாரவளை விந்துணுவெவ புனர்வாழ்வு முகாமில் 26 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பக்கச் சார்பற்ற விதத்தில் பூரணவிசாரணை நடத்த வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கேட்டுள்ளது.

இது விடயமாக அந்த அமைப்பு பகிரங்கக் கடிதம் ஒன்றை கடந்த வெள்ளியன்று ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளது.

வெட்டரிவாள்கள், பொல்லுகளுடன் வந்த கிராமவாசிகளிடமிருந்து முகாமுக்குள் இருந்தவர்களைப் பாதுகாப்பதற்கு பொலீஸாரும், இராணுவத்தினரும் தவறிவிட்டனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கிராமவாசிகளைத் தூண்டிவிட்டதில் அல்லது அவர்கள் முகாமுக்குள் நுழைவதற்கு உதவுவதில் பொலீஸாரும், படையினரும் ஈடுபட்டிருக்கலாம் என்று குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன - எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ-3-4)

# மரண அறிவித்தல்கள்

## சிவலிங்கம் நவநீதகிருஷ்ணன்

(ஓய்வு பெற்ற இறைவரி உத்தியோகத்தரும்,முன்னாள் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் கணக்காளரும்.)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், 17/2,மணல்தறை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட சிவலிங்கம் நவநீதகிருஷ்ணன் நேற்று (29-10-2000) ஞாயிறு காலமானார்.

அன்னார் திருமதி மீனாட்சி நவநீதகிருஷ்ணன் (விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர்-நயினாதீவு) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவலிங்கம் (முன்னாள் பங்காளர், விவேகானந்தா அச்சகம்) - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற விசுவலிங்கம் (முன்னாள் கிராம சபைத் தலைவரும், விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளரும்) - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி புவனேஸ்வரி மகாதேவாவின் அன்புச் சகோதரரும், செல்வி தயாளினி ( கலைத்துறை மாணவி - யாழ்.பல்கலைக் கழகம்),சுகந்தன் (மருத்துவத்துறை மாணவன் - யாழ். பல்கலைக்கழகம்), கெங்காதரன் (முகாமைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வி.சபாநாதன் (சமாதான நீதிவான், முன்னாள் குடியேற்றத்திட்ட அதிகாரி), வி.யோகநாதன் (பணியாளர், துறைமுக அதிகார சபை), டாக்டர் வி.வேதநாதன் (பிரதம வைத்திய அதிகாரி - மாநகர சபை), மகேஸ்வரன் (மின்முகாமி சிமெந்துக் கூட்டுத்தாபனம்), அமரர் புண்ணியநாதன், க.மகாதேவா (முன்னாள் தபால் அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி தவமணி (முன்னாள் அதிபர்), காலஞ்சென்ற சோமேஸ்வரி(ஆசிரியை), மாலினி (அதிபர், கொக்குவில் சி.சி.த.க.பாடசாலை), சொர்ணம்மா (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற கிருஷ்ணசாமி (முன்னாள் கிராமசபைத் தலைவர்), மனோன்மணி, காலஞ்சென்ற நாகேசு யோகம்மா, காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, செல்வநாயகம், திருநாவுக்கரசு, கார்த்திகேசு, அமரர்கள் கந்தசாமி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற செல்லத்துரை (வர்த்தகர்), பரநிருபசிங்கம் (முன்னாள் அதிபர்), பாலசிங்கம் (முன்னாள் இறைவரி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-10-2000) திங்கட்கிழமை அவருடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 1 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

**திருமதி மீனாட்சி நவநீதகிருஷ்ணன்** (மனைவி),

**வி.சபாநாதன்** J.P (மைத்துனர்)

*17/2, மணல்தறை ஒழுங்கை,*
*கந்தர்மடம்.* (80024)

## திருமதி தாமோதரம்பிள்ளை சின்னம்மா

(பெரியபிள்ளை)

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த திருமதி தாமோதரம்பிள்ளை சின்னம்மா அவர்கள் வன்னியில் தர்மபுரத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அருமை மனைவியும், லோகநாதன்(ரமணா), பாலசுந்தரம் (வரதன், ஆசிரிய ஆலோசகர் - தென்மராட்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை(இரத்தினம்), சந்திரசேகரம்(இராசு) மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், லோகேஸ்வரி(வவா), புஸ்பமலர்(மலர்), தனேந்திரகுமாரன்(ரங்கன் இசைக்குழு) ஆகியோரின் மாமியாரும், கந்தசாமியின்(புத்தளம்) மைத்துனியும், சசீந்திரன்(மக்கள் வங்கி புத்தளம்), சுரேந்திரன்(லண்டன்), கீதா(புத்தளம்) ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தர்மபுரம் வன்னியில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

தா.பாலசுந்தரம் (மகன்)

(ஆசிரிய ஆலோசகர் - தென்மராட்சி கல்வி வலயம்)

*16/3 கச்சேரி நல்லூர் வீதி.*
*யாழ்ப்பாணம்.* (C/13627)

# பொலிஸார் கைகட்டி நிற்க வன்முறைக் கும்பல் அட்டகாசம்

"தலவாக்கொல்லையில் நிலைமை மிக மோசமாக உள்ளது. படையின ரும் பொலிஸாரும் கைகட்டிப்பார்த்து நிற்க தமிழ்கள் மீது சிங்கள வன்முறைக் கும்பல்கள் காடைத்தனமான முறையில் வன்செயல்களைக் கட்ட விழ்த்துவிட்டுள்ளனர்".

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் மேற்கண்டவாறு கூறினார். தலவாக்கொல்லையில் தங்கியுள்ள அவருடன் நேற்றிரவு தொடர்பு கொண்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

படையினரும் பொலிஸாரும் நடந்துகொள்ளும் விதம் குறித்து உயர்மட்டத்துக்கு முறையிட்டும் பயன் ஏதும் கிட்டவில்லை. தற்போதைய நிலைமை தொடர்பாக ஐ.தே.க. தலைவருடன் அவசரமாகத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது- என்றும் அவர் கூறினார்.(ஐ-3-5)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திசேரா, விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி ஆகியோருடன் வட பகுதித் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா, மேஜர் ஜெனரல் சிவாலி வணிகசேகரா ஆகியோர் பங்குபற்றினர்.

வடக்கில் நடைபெறும் யுத்த நிலைமை குறித்து இக்கூட்டத்தில் விசேடமாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

அனுருத்த ரத்வத்த பிரஸ்தாப விசேட கூட்டத்துக்கு ஜனாதிபதியால் அழைக்கப்பட்டதால் அவரே மீண்டும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுவிட்டார் என்ற வதந்தி அரசியல் வட்டாரங்களில் வேகமாகப் பரவியது. அதனைத் தொடர்ந்து அரசாங்கம் அனுருத்த ரத்வத்த அந்தச் செய்திகளை மறுப்பதாக அறிக்கைவிடவும் நேர்ந்தது.

எனினும் அமைச்சர் அனுருத்தவே மீண்டும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்படுவார் என்று அரசியல் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

வியாழக்கிழமை நடைபெற்ற விசேட பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களை, பிரதி அமைச்சர்கள் நியமனங்கள் செய்யப்படும்வரை இரகசியமாகப் பேணுவார் எனக் கருதியே ஜனாதிபதி அவரை அந்தக் கூட்டத்துக்கு அழைத்திருப்பார் என்றும் நம்பப்படுகிறது. (அ)

## மட்டுவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கையின்போது மட்டுவில் வடக்குப் பிரதேசத்துக்குத் தெற்குப் புறமாக அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் பலமான நிலைகளையும், பங்கர்களையும் கைப்பற்றினர். இந்த நடவடிக்கை காலை 9 மணிக்கு வெற்றிகரமாக நிறைவடைந்தது.

படையினரின் பீரங்கி மற்றும் ஆட்லறிப் பிரிவினர் விடுதலைப் புலிகள்மீது மேற்கொண்ட தாக்குதலில் அவர்கள் தரப்பில் குறைந்தது 25 உறுப்பினர்கள் உயிரிழந்தனர்.

விடுதலைப்புலிகள் அங்கு புதைத்து வைத்திருந்த பெரும் எண்ணிக்கையான மிதிவெடிகள், டாங்கி எதிர்ப்பு கண்ணிவெடிகளை இராணுவத்தின் பொறியியல் பிரிவினர் அழித்தனர்.

இந்த நடவடிக்கையின் போது படையினர் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-8)

## யாழ்.நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த சகல தரப்பினரும் தத்தமது இடங்களில், அலுவலகங்களில் அன்று காலை 10.30 மணி முதல் 10.32 மணிவரை இரு நிமிடங்கள் எழுதுகோல் எழுதுவதை இடைநிறுத்தி எழுந்து நின்று எழுத்துத் துறைக்கு தன்னை அர்ப்பணித்த ஊடகவியலாளர் நிமலராஜனுக்கு அஞ்சலி செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3-111-173)

## களுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் -

இதையடுத்து அவர் கைதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளிடம் கோரியுள்ளார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அடுத்தவாரம் இந்தச்சிறைச் சாலைகளுக்கு மகேஸ்வரன் நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிடவுள்ளார். (ஐ-3)

## அரசாங்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்டுள்ளது. சம்பவத்துக்குப் பின்னணியில் இருந்த இரு நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

வன்செயல்கள் மீண்டும் இடம்பெறாமல் தடுப்பதற்கென தலவாக்கொல்லையிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென இராணுவத்தினரும் பொலிஸாரும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (ஐ-ரி-8)

# விசாரணைகள் ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்

பண்டாரவளை விந்துனுவெவ தடுப்பு முகாம் கைதிகள் மீது நடத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதல் சம்பவம் தொடர்பாக உள்ளூரிலும், வெளிநாட்டிலும் எழுந்துள்ள கண்டனங்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக அந்தச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஜனாதிபதி தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார்.

இந்தப் படுகொலை தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்காக இரு பொலிஸ் குழுக்களை ஜனாதிபதி தனது பொறுப்பில் நியமித்துள்ளார்.

இந்தக் குழுக்கள் தமது முதல் கட்ட அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருக்கின்றன. இதன் எதிரொலியாக ஆறு இன்ஸ்பெக்டர்கள் உட்பட 60 பொலிஸார் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச்சபை, செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு, உள்ளூர் அமைப்புக்கள் இந்தப் படுகொலை தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரியிருந்தன.

இதைத் தொடர்ந்தே சர்வதேச மட்டத்தில் நாட்டின் நற்பெயரைக் காப்பாற்றுவதற்காக ஜனாதிபதி அந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் தமது நேரடிக் கண்காணிப்பின் கீழ் எடுத்துள்ளதாக கொழும்பு செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது. (ஐ-3)

## கலகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மையில் நேற்றுப் பிற்பகல் பாதுகாப்புச்சபை அவசரமாகக் கூடியது.

தலவாக்கொல்லைச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட ஜனாதிபதி அங்கு நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும் படி பிரதமருக்குப் பணிப்புரை விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்தே பிரதமர் பாதுகாப்புச் சபையைக் கூட்டி நிலைமையை ஆராய்ந்தார்.

இந்தக்கூட்டத்தில் முப்படைத் தளபதிகளும், பிரதிப் பொலிஸ்மா அதிபரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தை அடுத்து இராணுவத்தினரும், கலகம் அடக்கும் பொலிஸாரும் நேற்றிரவு அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (ஐ-3)

## தலவாக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்தவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகமும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளும் ஏவப்பட்டன. இதில் நான்கு தமிழர்கள் கொல்லப்பட்டனர்; பத்துப் பேர் காயமடைந்தனர். ஊரடங்கை மீறியதற்காக இவர்கள் சுடப்பட்டதாகப் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தலாவாக்கொல்லை நகரில் உள்ள சிங்களவருக்குச் [illegible]த்தமான சில கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதைத் தொடர்ந்து கலவரம் தீவிரமடைந்தது. தமிழர்களுக்குச் சொந்தமான அங்குள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கடைகள் தாக்குதலுக்கு இலக்காகின. 25 கடைகள் முற்றாக எரிந்து நாசமாகின.

தலாவாக்கொல்லை நகரப்பகுதி புகைமண்டலமாகக் காட்சியளித்தது.

### ரயிலுக்குத் தீவைப்பு

நானுஓயாவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தபால் ரயிலை நேற்றுக்காலை வட்டகொட என்னும் இடத்தில் தண்டவாளத்துக்கு குறுக்கே மரங்களைப் போட்டு வழிமறித்த கும்பல் ஒன்று அந்த ரயிலின் நான்கு பெட்டிகளுக்குத் தீவைத்துக் கொளுத்தியது. எனினும் அந்த ரயில் எஞ்சின் பாதுகாப்பாக வட்டவளை ரயில் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது. தொடர்ந்து அந்த ரயில் நிலையமும் தாக்கப்பட்டு முற்றாக தீக்கிரையாக்கப்பட்டது. ரயில் நிலைய அதிபரும் மற்றுமொருவரும் காயமடைந்தனர்.

எரிக்கப்பட்ட ரயிலில் பயணம் செய்த 150 பயணிகளும் பொலிஸாரால் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து மலையகத்தின் பல பகுதிகளிலும் ரயில் மற்றும் போக்குவரத்துச் சேவைகள் நிறுத்தப்பட்டன.

தலவாக்கொல்லை நகரில், நேற்றுப் பின்னிரவிலும் கலவரங்கள் நீடித்ததாகப் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ஐ-3-5-8)


## பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம் இரு இடங்களிலும் இணுவில்

**A/L 2001 DAY CLASS**

வர்த்தகப் பிரிவு

| | | |
|---|---|---|
| பொருளியல் | - S.வரதராஜன் | ஆரம்பம்: |
| கணக்கீடு | - B.முகுந்தன் | 02.11.2000, |
| வணிகக்கல்வி | - V.முரளி | வியாழன் |

யாழ்ப்பாணம் :- காலை 8.30 (பழைய நேரம்)

இணுவில் :- காலை 10.00 (பழைய நேரம்)

(79901)

* கலைப்பிரிவு விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

**கணக்கீடு**
**திரு.பாலவாசன்**
B.B.A. (F.M.Spl)

**A/L 2002**
**சொத்து விற்பனை**
Tue, Thu - 3.30 - 4.30 P.M
ஆரம்பம் : 31.10.2000 - Tue

**BEACON**
(வெலிங்டன் சந்தி அருகில்) (80027)

நாம்
இடம் மாற்றுகின்றோம்
(உள்ளே) சந்தியா
(80009)

**ARIVOLI நல்லூர்**

இளைய, புதிய தலைமுறை பட்டதாரி ஆசிரியர்களின் வழிகாட்டலில்

**G.C.E A/L 2001, 2002**

Chemistry : N.BRATLY Bsc(Hons)
C.Maths : B.ரவீந்திரன் Bsc
Physics : பிரபல ஆசிரியர்
Biology : T.ஜெயசீலன் Bsc

மற்றும்
யாழ்.முன்னணி ஆசிரியர்களின் நெறிப்படுத்தலில்
Yr 8 - 11, O/L வினாவிடை வகுப்புகள்.
அனுமதிகளை உடன் பெறுக.
(80026) - நிர்வாகி -



## மணமங்கள வாழ்த்து

இன்று (30.10.2000) திங்கட்கிழமை காலை 9.29 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் யாழ்.ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் மணவாழ்வில் இணையும்

திருவளர் செல்வன்
**வேலாயுதம் சிவசக்திவேல்**
(ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை)
அவர்களும்



திருநிறை செல்வி
**ஆனந்தஜோதி இராசையா**
(B.A in English)
(கோண்டாவில் கிழக்கு)
அவர்களும்

இறையருளால் காலம் முழுவதும் சகல சௌபாக்கியங்களும் பெற்று ஞாலமதில் புகழோடு பல்லாண்டு வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நண்பர்கள்.
(C/13609)



## மரண அறிவித்தல்

### சின்னையா சிவஞானம் (சின்ராசா)

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சின்னையா சிவஞானம் (சின்ராசா) அவர்கள் நேற்று (29.10.2000) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சின்னையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், இரத்தினம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், செல்லம்மா, அருளம்மா, தருமலிங்கம் மற்றும் பொன்னுத்துரை, இரத்தினம்மா ஆகியோரின் சகோதரனும், சரோஜினிதேவி (கனடா), சிவசுத்தானந்தன், சிவானந்தன், இரஞ்சனாதேவி (ஜேர்மனி), இராகினி (சுவிஸ்), காலஞ்சென்ற இன்பா, மற்றும் றூபினி, றூபன் (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (30.10.2000) திங்கட்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் தாவடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கே.கே.எஸ். வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
**சி.சிவசுத்தானந்தன்**
(சிவா - மகன்)
(C/13628)



## புதுக்கடைத் திறப்பு விழா

பரமன் திருவருளால் பரமேஸ்வராச் சந்தியில் உங்கள் நீண்டகால நண்பன் திரு.சி.சுந்தரலிங்கம் (மாமா) அவர்களின்

**நியூ சரஸ்வதி விலாஸ்**

என்னும் உணவகம் இன்று (30.10.2000) திங்கட்கிழமை பகல் 10.48 மணிமுதல் 1.15 மணிவரையுள்ள (பழைய நேரம்) சுபமுகூர்த்த வேளையில், ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் குடும்ப சமேதரராய் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி' - உரிமையாளர்.

(79978)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.